உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 32 | பிரமாதீச – வைகாசி – 10—6—73 | இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# அருமையில் எளிய அழகு

**பொருள்களின் இயல்பு:**

இயற்கையிலே சில பொருள்கள் கிடைத்தற்கு அரியனவாய் உள்ளன; சில பொருள்கள் மிக எளிமையாகக் கிடைக்கின்றன. பொன்னும், முத்தும், வைரமும் விலை மிக்கிருத்தல் மட்டுமன்று; கிடைத்தற்கும் அரியனவாகும். பொன்னைச் சுரங்கத்தினின்றும் வெட்டி எடுத்துக் கலப்புப்பொருள்களைக் களைந்து உருவாக்கவேண்டும். அதனைச் சுரங்கத்தினின்றும் எடுப்பது எவ்வளவு கடினமான செயல் என்பதை யாவரும் அறிவர். முத்தை உயிரையும் பொருட்படுத்தாமல் ஆழ்கடலில் மூழ்கியே எடுக்கவேண்டும். வைரத்தையும் அப்படித்தான் முயன்று எடுத்துப் பட்டை தீட்டி உருவாக்கவேண்டும். இவை இயல்பிலே இவ்வாறு அமைந்துள்ளன. இவைகள் ஏன் கருங்கல், சுக்கான்கல், கூழாங்கல் முதலியனபோல எங்கும் எளிதாகக் கிடைக்கலாகாது!

உயர்ந்த பொருள்கள் இயற்கையில் அரியனவாகத்தான் உள்ளன. இந்த அரிய பொருள்கள் ஒருவனுக்கு எளிதாகக் கிடைத்துவிடுமானல் – அவன் ஏதோ வேலையாகச் செல்லும் பொழுது, அல்லது ஏதோ ஒரு சிறு முயற்சி செய்யும் பொழுது அவ்வழியிலே தானக அவன் கையில் இவை கிடைத்துவிடுமானல், அதுபற்றியே இந்தப் பொருளை மிக எளிய பொருளாக எண்ணிவிடுதல் கூடுமோ! கூடாது. ஆயினும், சிலர் அரிய பொருள்களும் எளிதாகக் கிடைத்துவிட்டால் எளிதாகவே நினைத்துவிடுகிருர்கள். இதனையே மாணிக்கவாசகர்,

“ மையிலங்குநற் கண்ணிபங்கனே
வந்தெனைப்பணி கொண்டபின்மழக்
கையிலங்குபொற் கிண்ணம்என்றலால்
அரியைஎன்றுனைக் கருதுகின்றிலேன் ”

என்ருர். ஆயினும் அவர் உண்மையில் இறைவனைத் தமக்கு மிக எளிமையாகக் கிடைத்த அரிய பொருள் என்பதை எண்ணி,

“ அருமையில் எளிய அழகே போற்றி ”

என்று உளம் உருகிப் பாடுகின்ருர்.

அரியனுதல் ;

இறைவன் அரியதினும் அரியவனுதலை மாணிக்கவாசகர் பல இடங்களில் மறவாமல் நினைந்து போற்றுகின்ருர்.

“ பிரமன் மால் காணுப் பெரியோன் ”

‘ சேண்வயின் –
ஐம்புலன் செலவிடுத்து அருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயிர் ஆக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும் ”

“ உலவாக் காலம் தவம் எய்தி
உறுப்பும் வெறுத்திங்கு உனைக் காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
பாவியேனைப் பணிகொண்டாய் ”

“ வான்வந்த தேவர்களும் மாலயனே டிந்திரனும்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு “

"தேவர் கனவிலும் காண்பரிய செம்மலர்ப் பாதங்கள்"

"உணர்ந்த மாமுனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே"

"புற்றுமாய் மரமாய்ப் புனல் காலே
உண்டியாய் அண்ட வாணரும் பிறரும்
வற்றி யாரும்நின் மலரடி காணு மன்ன."

எளியனும் ஆதல் :

இறைவன் இத்துணை அரியவனயினும் அடியவர்க்கு மிக எளியனும் ஆகின்றான். அதற்குக் காரணம் அவர்கள், மேற் சொல்லியபடி புற்றுமாய் மரமாய்ப் புனல் காலே உண்டியாய் நின்று செய்யும் தவத்தவரினும் மேலான தவத்தைப் பல பிறப்புக்களில் செய்தமையேயாம். அத்தவம் காரணமாக ஞானசம்பந்தருக்கு அவர் பிறந்து மூன்றாண்டு தொடங்கும் பொழுதே அம்மையோடு உடனாய் அவர் இருக்கும் இடத்திற்கு எழுந்தருளி வந்து ஞானப் பாலை அளித்தருளினான். மற்றும், "மருகல் உடையாய் தகுமோ இவள் உண் மெலிவே" என்று வினவிய பொழுது, 'ஆம்! தகாதுதான்' என்று விடம் தீண்டி இறந்த அவள் கணவனை உயிர் பெற்று எழுந்து அவளோடு கூடி வாழச் செய்தான். அப்பர், "என் ஆவி காப்பதற்கு இச்சை உண்டேல் இருங் கூற்று அகல, மின் ஆரும் மூவிலைச் சூலம் என்மேற் பொறி" என்று கேட்டவுடனே அவ்வாறு பொறித்தான்; சுந்தரருக்கு அவர்தம் மனைவியாரது ஊடலைத் தீர்க்க இருமுறை தூது சென்றான். மற்றும் இவைபோல்வன பல.

உண்மை உணர்வு :

எனவே, "பிரமன்மால் காணுப் பெரியோன்" என்பது முதலிய வாக்குகளைக் கொண்டு, 'இறைவன் யாவராலும் அறிதற்கு அரியன் - அடைதற்கு அரியன்' என்று சொல்லி அகன்றொழிதலும் கூடாது. சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றவர்களைத் தானே வலியச் சென்று ஆட்கொண்டதுபோல எளிமையில் கிடைப்பவன் என்று எண்ணி வாளா இருத்தலும் கூடாது.

"பல்லூழி காலம் பயின்றரனை அர்ச்சித்தால்
நல்லறிவு சற்றே நகும்"

என்றபடி, 'பல்லூழி காலம் நாம் தவம் செய்யக் கடவோம்; செய்தால் அவனை அடைதல் கூடும்' என உணர்ந்து இமைப் பொழுதும் வீண் செயல் இன்றித் தவ நெறியில் நிற்றலே அறிவுடைமையாகும். தவமாவது, வாழ்த்த வாயும், நினைக்க மடநெஞ்சும், தாழ்க்கச் சென்னியும் தந்த தலைவனாகிய இறைவனை அவனது குறிப்புணர்ந்து அவனை நினைத்தலும், வாழ்த்தலும் வணங்கலுமேயாகும்.

தவத்தின் சிறப்பு :

> " அரியஎன் றாகாத இல்லை; பொச்சாவாக்
> கருவியாற் போற்றிச் செயின் "

எனத் திருவள்ளுவர் பொருள் செயல் வகைக்குக் கூறியது இறை நெறிக்கும் பொருந்துவதேயாம். அதனால் தேவர் கனவிலும் காண்பரிய அருமையுடைய இறைவனை அவனிடத்து வைத்த உறுதியான அன்பினால் செய்யும் அத்தவத்தினால் எளிதில் அடைதலும் கூடும். அதுவே அத்தவத்திற்கு உள்ள சிறப்பு. ஆனால், அதனைச் செய்தல் அரிது. அந்த அருமை நோக்கிப் பலர் அதில் முயலாது விடுகின்றனர். " நோற்பார் சிலர் பலர் "நோலாதவர் என்ற திருவள்ளுவர் வாக்குப்படி ஒருசிலரே அத்தகைய தவத்தில் முயல்கின்றனர். அதனால், அவ்வொரு சிலருக்கே இறைவன் எளியனாகின்றான். அதை அறியாமல் பலர், 'எங்கட்கு ஏன் இறைவன் எளியனாகவில்லை' என்று வாதம் செய்கின்றனர். ஞானசம்பந்தருக்கு இறைவன் ஞானப் பால் கொடுத்ததுபோல, மற்றவர்களுக்கு ஏன் கொடுத்தல் கூடாது? அப்பருக்குக் கடலில் கல் மிதக்கச் செய்ததுபோல மற்றவர்களுக்கு ஏன் செய்தல் கூடாது? என்று இவைபோலப் பல வினாக்களை வினவுகின்றனர். அவர்களுக்கெல்லாம் விடை சொல்வது என்றால், எளிதான காரியம் அல்ல. உண்மையை உணர்வது என்பதும் அவ்வளவு எளிதானதல்ல. உலகியலிலே உள்ள உண்மைகள் பலவற்றையே உணர்ந்துகொள்ள முடிய வில்லை என்றால், இறைவனை அடையும் நெறி அல்லது தவம் என்பதைப் பற்றியும், அதன் உண்மை இயல்பைப் பற்றியும் எல்லாரும் உணர்ந்துவிட முடியாது; அவர்களுக்கு உணர்த்தவும் இயலாது. ஏனெனில், ஒன்றை உணர்த்தினாலும் உணர்வதற்கு அது பற்றிய முன்னறிவு சிறிதாயினும் வேண்டும். அஃது இல்லாவிடில் உணர முடியாது. எடுத்துக்காட்டாக ஒரு விஞ்ஞான நுட்பத்தை ஒருவர் எடுத்துச் சொன்னாலும் அதை விஞ்ஞான அறிவு உள்ளவரே உணர முடியும்; மற்றவர்கட்கு இயலாது. இது போலத்தான் இறை நிலையும். அவரவர்

களுடைய இறை நிலை உணர்வுக்கு ஏற்ப உணரக்கூடிய தாகும். என்றாலும், யாவர்க்கும் உணர்வை உண்டாக்க முயல வேண்டுவது உணர்ந்தவர்கட்குக் கடனாகின்றது.

## சமய நூற் பயிற்சி :

உலகம் எவ்வாறிருப்பினும், "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று எண்ணுவதும், எண்ணி, 'உய்யும் வழி இது' என உணர்த்தலும் உணர்ந்தோராகிய பெரியோர்கட்கு இயல்பாய் உள்ளன. அவ்வாறு உணர்த்தப்பட்ட உண்மை நூல்களே சமய நூல்கள். ஆகவே, உண்மையை உணர விரும்புவோர்க்குச் சமய நூற் பயிற்சி இன்றியமையாதது. இதனைச் சமய நிறுவனங்கள் மக்களுக்கு ஒல்லும் வகையில் அளித்து வருகின்றன. தருமையாதீனத்தில் அண்மையில் நிகழ்ந்த ஆதி பரமாசாரியரது குருபூஜை விழாப் பத்து நாட்களிலும் சமயப் பயிற்சி வகுப்புப் பல்வேறு முறையில் தொடர்ந்து நடைபெற்றது. வேதம், ஆகமம், சாத்திரம், புராணம், இதிகாசம், அறநூல் முதலிய பலவகை நூல்களின் பொருள்களும் பயிற்சி வகுப்பில் தக்காரால் விளக்கப்பட்டன. பல்வேறு இடங்களிலிருந்து வந்த கற்றூர் பலர் வகுப்பில் கலந்து பயிற்சி பெற்றனர். முடிவில் தாங்கள் கேட்ட கருத்துக்களைப் பல தலைப்புக்களில் கட்டுரையாக எழுதியும் தந்தனர். வகுப்பில் கலந்து கொண்டவர்கள் அதற்குரிய சான்றிதழும் பெற்றுச் சென்றனர் இத்தகைய சமயப் பயிற்சி வகுப்புக்கள், சில சிறப்புக் காலங்களிலேனும் நடைபெறுமாயின், மக்கள் உண்மை உணர்ந்து உய்தி பெறுவர்.

இறைவன் 'அரியன்' எனப்படுகின்ற அதே நிலையில் எளியனாயும் இருந்து, 'அருமையில் எளிய அழகு' எனப்படுவது போல, அருமையாயுள்ள சமயப் பயிற்சி வகுப்பும் தருமை ஆதீன முதற்குரவர் விழாவில் எளிமையாய்க் கிடைக்கப்பெற்று, அருமையில் எளிய அழகாய் இலங்கியது.

இறைவன் அரியதினும் அரியனாதலையும், அடியார்க்கு அருமையில் எளிய அழகனாய் எளியனாதலையும் பலவாறு நமக்கு அறிவுறுத்தியருளியவர் மாணிக்கவாசக சுவாமிகள். அவரது ஆனிமாமகத் திருநாள், வருகிற ஆனித் திங்கள் 20 ஆம் நாள் (4—7—1973) புதனன்று வருகின்றது அவ்வமையம் அவரது பெருமையும், அவரது அருள் வாக்கின் அருமையும் இனிது விளங்க அந்நாளைப் பலவகையிலும் சிறப்புறக் கொண்டாடிக் குருவருளையும், திருவருளையும் பெற்று உய்வோமாக.

உ

குருபாதம்

தருமையாதீன ஸ்தாபகர்

**ஸ்ரீகுருஞானசம்பந்தர் குருபூஜைத்திருநாளின் அங்கமாக**

14-5-73 முதல் 23-5-73 முடிய பத்துநாள் நடைபெற்ற

**சமயப் பயிற்சி வகுப்பை**

14—5—73 திங்கட்கிழமை காலை 10 மணியளவில் தொடங்கிவைத்து

தருமையாதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

வழங்கியருளிய

# ஆசியுரை

திருச்சிற்றம்பலம்

"வழுவிலாது உன்னை வாழ்த்தி வழிபடும் தொண்டனேன்உன்
செழுமலர்ப் பாதங் காணத் தெண்டிரை நஞ்சம் உண்ட
குழகனே கோல வில்லி கூத்தனே மாத்தா யுள்ள
அழகனே ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே"

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

நமது தருமையாதீனம் இற்றைக்கு நானூறு ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ குருஞானசம்பந்தப் பெருமானால் வில்வாரண்யம் எனப் பெயர்பெற்று விளங்கிய இத்தருமபுரத்தில் தோற்றுவிக்கப்பெற்றது. அவர்களது குருபூஜை விழாவில் அவர்களது இலட்சியங்களை - அவர்கள் போதித்தவற்றை உணர்த்த வேண்டிய கடமை நமக்கிருக்கிறது. அவர்களது உயர்ந்த போதனைகளையும் - திருவருள் குறிப்புக்களையும் சமுதாயத்துக்கு உணர்த்தி மக்களை நெறிபடுத்தவே இவ்வாதீனம் இலங்கிவருகிறது. நாள்தோறும் இவை செய்யப்பெற்றாலும்,

ஆதிபரமாசாரியரது விழாவை அவரது அருள்மொழிகளையும் அவரது முன்னோர்களாகிய சமயாசாரியரது நெறிகளையும் விளக்கும் வகையில் கொண்டாடுவதே அவரை நாம் போற்றி நிற்பதாகும்.

அறநெறிகள் நம் முன்னோர்களால் எவ்வாறெல்லாம் போதிக்கப்பெற்றன. அவர்கள் முயற்சியால் மக்கள் வாழ்வில் மனமாற்றம் ஏற்பட்டதா? அம்முயற்சியில் அவர்களுக்கு வெற்றி கிடைத்ததா அல்லது தோல்வி ஏற்பட்டதா என்பன போன்ற செய்திகளை எல்லாம் இப் பத்துநாள் வகுப்பில் நாம் சிந்திக்க விருக்கின்றோம். அறநெறிகள் இந்நாட்டில் வெற்றிபெறவில்லை என்றால், அதற்கு யார் காரணம்? ஆசிரியர்கள் காரணமாக மாட்டார்கள்; மக்களே அதற்குக் காரணமாவார்கள்!

'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்'

என்ற குறட்பாவில் திருவள்ளுவர் அறநெறி வழி ஒழுகாத மக்கள்இனம் கெட்டு அழியும் என்பதை விளக்கியுள்ளார். ஆயினும் மக்கள்மேல் எல்லாக் குறைகளையும் சுமத்த விரும்ப வில்லை. ஏனெனில் பெரும்பாலான மக்கள் வாழ்வில் அறநெறி களை மேற்கொள்ளத்தக்க காலமோ அல்லது சூழ்நிலையோ அவர்களுக்கு அமைவதில்லை. அதனால் வாழவேண்டிய முறை யையே அவர்கள் அறிவதில்லை. மணிவாசகப்பெருமான் இதனை விளக்கிப் பேசுகின்றார்.

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே!

நல்வினை நீத்து வல்வினைப்பட்டு வீழ்கின்ற மனித இனம் முன் னேற வேண்டுமானால், நம்முன்னோர்கள் காட்டிய அறநெறி நிற்றலே அதற்குத் துணைபுரியும். அதனைச் சிந்திக்கவே இப் பயிற்சி வகுப்பை நாம் துணையாகக் கொள்ளவேண்டும்.

'தட்டினால் திறக்கப்படும் கேட்டால் கொடுக்கப்படும்' என்ற வாசகத்தைக் கேட்டிருக்கிறோம்! கேட்டால் கொடுக்கப் படும் என்பதற்கு இறைவனிடம் ஒரு பொருளை விரும்பிக் கேட்டால் கொடுத்தருளுவான் என எல்லாரும் பொருள் கூறு

கின்றனர். உண்மைப்பொருள் அதுவன்று, ஏனெனில், இறைவன் திருவருளை அவன் கொடுக்க நாம் பெறவேண்டுமே யல்லாது, நாமே வலிந்து எடுத்துக்கொள்வதன்று.

" தாமே தரும் அவரைத் தம்வலியி னுற்கருத
லாமே ? இவன் ஆல் அதற்கு "

என்பது திருவருட் பயன். எனவே, " கேட்டால் " என்பதற்கு, ' இறைவன் சொல்லியதைக் கேட்டு நடப்பவர்களுக்கு அவனது அருள் எல்லா நலங்களையும் அளிக்கும். இறைவன் சொல்லி யவை வேதாகமங்கள்; திருமுறை சாத்திரங்கள். அவற்றில் சொல்லியவற்றை உணர்ந்து அவற்றின்படி நடந்தால் வேண்டிய பயனை வேண்டியவாறு அடையலாம்.

நன்மை தீமைகளினால் விளையும் விளைவுகளைக் கதைகள் வாயிலாக உணர்த்துவன நமது இதிகாச புராணங்கள். இன்றைய கல்வி யாவும் வெறும் உடல் வளர்க்கவே உபகாரப் படுகின்றன. உயிர், வளர்ச்சிபெற்று உய்யவே கல்வி என்ற சிந்தனை ஒவ்வொருவரிடமும் வளரவேண்டும்; உயிர் வளர்க்கத் தெரியாத மாந்தர்களை நோக்கி அப்பர் பெருமான்,

' பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேஇரை தேடி அலமந்து
காக்கைக் கே இரை யாகிக் கழிவரே '

என நொந்து கூறுகின்றார். எனவே உயிர் வளர்ச்சிபெற்று இறையருள் எய்துவதே வாழ்வின் பயன் என்ற நிலை மக்களி டையே வளரவேண்டும்.

தன்னியல்பால் உயிர் அடிக்கடி ஆணவம் என்ற அழுக்கால் அறியாமையில் ஆழ்கிறது. அதனை அடிக்கடி அறநெறி - இறை யுணர்வு இவற்றால் தூய்மை செய்து கொள்ளவேண்டும். மூக்குக் கண்ணாடியை ஒவ்வொருமுறை கழற்றும்போதும் போடும் போதும் துடைத்துப் போடுகிறோம். அவற்றில் அழுக்கேறி விட்டால் காணும் பொருள் தெளிவாக விளங்குவதில்லை. அது போல் நம் உயிரில் மல அழுக்குகள் பற்றி நிற்பதனால் நம் காட்சி கள் திரிபு பட்டு, நம் வாழ்க்கை வீணாகும். நம் ஆன்ம அழுக்கை நீக்கிக்கொள்ளப் பாடுபடவேண்டும். நீக்கிக்கொள்வோமானால்

நாம் பரமேசுவரனேடு சேர்ந்துவிடலாம். இவற்றை எல்லாம் தெரிந்து கொள்ளவே இவ்வகுப்பு இங்கே தொடங்கப்படுகிறது அரசியல் வாழ்வில் இவர்தாம் எனக்குத் தலைவர் எனத் தெரிந்து தேர்ந்துகொள்ளுகின்றேம். அதுபோலவே ஆன்மிகத் துறையிலும் இவர்தாம் தலைவர் என ஒருவரை நாம் தேர்ந்து கொள்ள வேண்டும். நமக்குத் தலைவர்கள் சமயாசாரியர்களே, நமது பண்பாட்டிற்கும், இனத்திற்கும், மொழிக்கும் வெள்ளம் போல் பெருந்தீங்கு வந்தபோது அதனைத் தடுத்து நிறுத்தி அரண்கோலிக் காத்தவர்கள் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஆவார்கள். இந்த நாட்டிற்கே ஒருபண்பாடு உண்டு என்பதனைத் தெளிவுபட விளக்கிய பெருமை அவர்களுக்கு உரியது. சந்தானசாரியர்கள் சமயத்தை விஞ்ஞான அடிப்படையில் வரையறுத்துக் காட்டியவர்கள். தற்கால விஞ்ஞானக் கொள்கைகளுக்கு நம் ஆசாரியர்கள் கருத்து மிகவும் இசைந்து வருவதைக் காண்கிறேம்.

சமய இலக்கியங்களிலே அருளாளர்களது அருளனுபவங்கள் வெளியிடப்படும்போது நமது வளர்ச்சியின்மை காரணமாக அவற்றில் முரண்பாடு உள்ளது போலத்தோன்றும். 'கண்ணால் யானும் கண்டேன் காண்க' என்ற மாணிக்கவாசகப்பெருமான், கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை என்கின்றார். மேம் போக்கில் இது முரண்பாடு போல் தோன்றலாம். இதற்கு விளக்கம் தருவனவே சாத்திரங்கள். கண்டதும் - பேசியதும் அனுபவித்ததும் அனுக்கிரகித்ததும் உண்மை ஆனல் முழுதுங் காணவில்லை என்பதே உண்மை. கடல் காட்சிக்குத் தெரிகிறது; அதில் புகுந்து ஆடுகிறேம். நம் அனுபவத்திற்கு வருகிறது. வந்தாலும் அதன் பரப்பும் ஆழமும் - உட்பொருள்களும் நமக்குப் புலப்படாதவாறு போல உயிர்கட்கு இறைக்காட்சி கிட்டினும் அதுவே தன் எல்லையன்று என்பதைச் சாத்திரங்கள் விளக்கும் அருமைப்பாட்டினைக் காணலாம். எனவே, சமய இலக்கியங்களில் சாதாரண மாணவர்கட்கு முரண்போலத் தோன்றுவன சாத்திரப் பயிற்சியுடையவர்கட்கு உண்மையாக விளங்கும். அத்தகைய சமயப் பயிற்சி இங்கு நடைபெற இருக்கின்றது. இதில் கலந்துகொள்பவர்கள் இதன்கண் ஆசிரியர்களாக வருவோர் கூறும் சாத்திர தோத்திர உண்மைகள் பலவற்றைக் கருத்தூன்றிக் கேட்பார்களாயின் அறிவு விளக்கம் மட்டுமன்று, இறையருள் நலத்தையும் இனிது பெறுவர். அங்ஙனம் பெற்றுப் பயனடைய நம் செந்தமிழ்ச் சொக்கர் திருவருளைப் பிரார்த்திக்கின்றேம்.

---

# புண்ணிய - பாவங்கள்

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்
திரு. ச. தண்டபாணி தேசிகர்

உபபாதகங்களாவன : முனிவர்களுக்கென்று கொடுத்த பொருளை அவமதித்து அபகரித்தவனும்; சிவாகமநெறி ஒழுகும் சைவர்கள் செல்வத்தைக் கவர்ந்தவனும்: பிறரைக்கொண்டு அவர்கள் செல்வத்தைக் கவர எண்ணுபவனும் ; யாமே உயர்ந்த சாதி, பேரறிஞர் என்று எண்ணி உயிர்களிடத்து இரக்கம் காட்டாது இடையூறுகள் செய்பவனும், அகங்காரமுடையவனும் ; தபசிகளைக் கோபிப்பவனும், இடம்பத்திற்காக விரதம் முதலியவற்றை மேற்கொள்ளுபவனும் ; தனக்கு வந்த துன்பத்தைப் போக்கி உபசரித்த கல்நெஞ்சனும் ; அடங்காத ஆசையால் பலவித போகங்களை அனுபவிப்பவனும் ; பிறர்க்கு எள்ளளவும் ஈயாமல் பிறர் கையில் உள்ள பொருளை எப்படி வாங்கலாம் என்று எண்ணியிருப்பவனும் : வஞ்சகனும் ; பிறர் அறியாமையாலோ, சூழ்நிலையினுலோ ஒரு குற்றம் செய்துவிட்டால் அதனை அக்கணமே மறந்து விடாமல் என்றைக்கும் நினைத்திருந்து பழிக்கும் மார்ச்சரிய குணமுடையவனும் ; தனக்கென்று மணஞ் செய்து கொண்ட மனைவியிருக்கவும், பிறன் மனைவியைப் புணர்ந்து வெட்கம் மானங்களை உதறியவனும் ; கொண்டானைத் தெய்வமென்றெண்ணும் குலக்கொடியை இழிவாகக் கருதும் அறிவிலியும் ; அங்ஙனமிருக்கின்ற பிறன் மனைவியைப் புணர விரும்புபவனும் ; பார்ப்பவனும் ; நல்ல குலத்துதித்த கன்னியை இவள் இப்படி ; அவள் அப்படி என்று குற்றம் கூறும் துஷ்டனும் ;

தன் பெண்ணை சிவபக்தியும், சிவப்பணியும் செய்கின்ற ஒருவனுக்குக் கொடுக்காமல் வேறு ஒருவனுக்குக் கொடுக்கும் பழிகாரனும் ; பிரமம் முதலிய மணங்களால் விதிப்படி மணந்து கொள்ளாத இழிந்தோனும், யோக சித்தர்களையணுகி எனக்குப் பொன்னைக் கொடு. மண்ணைக்கொடு, பெண்ணைக்கொடு என்று வரங் கேட்போனும் ; தம் முதலாளிக்கு நிலைகுலைவான காலம் நேரம் நேர்ந்தபோது அவனைப் பாதுகாக்காமல் சமயம் பார்த்து நழுவும் வேலையாட்களும் ; நல்லோரை அவமதித்துக்

கொலை செய்யும் தீயோனும்; சுற்றத்தார், புண்ணியவான்கள், பசுக்கள், அரசர்கள், வணிகர்கள், வேளாளர்கள், பெண்கள் இவர்களைக் கொழுத்துப்போய் கோபித்துக் கொலைசெய்பவனும்; வீதிகளில் உள்ள மரங்கள், திருக்கோயிலிலுள்ள மரங்கள், நந்தவனத்துச் செடிகொடிகள் இவற்றை ஒடித்து வெட்டுபவனும், நந்தவனத்திலுள்ள பூக்களைத் தனக்காகப் பறிக்கும் இடும்பனும், திருக்கோயிலுக்குரிய பணிகள் செய்வோரையும், நெல், அரிசி, பயறு, உளுந்து முதலியவற்றை அபகரிப்பவனும்; சிறிதும் கொடுக்குங்குணமில்லாத கஞ்சர்களிடத்துக் கைப்பொருளைக் கேட்டுப் பெறுபவனும்; சிவபூசை செய்த பயனைக் காசுக்காக பிறர்க்குத் தத்தம்பண்ணிக் கொடுப்போனும், மக்கள் இன்புறுவதும் துன்புறுவதும் முன்செய்த புண்ணிய பாவங்களின் பயன் என்று கருதாத பிராம்மணனும்; தான் உண்டாக்கிய குளம் குட்டைகள் தோப்புத்துரவுகள், மனைவி மக்கள் இவைகளைப் பொருளுக்கு விற்கும் ஈனனும், நல்ல விரத சீலமுடைய பெரியோர்கள் திரவியத்தைத் திருடுபவனும்; தன் மனைவி கொண்டு வந்த சீதனப் பொருளைச் செலவழிப்போனும், கள்குடித்த மனைவியைப் புணர்பவனும், கடன்பட்ட பொருளைத் திருப்பிக் கொடுக்காதவனும்; நெல்லை வட்டிக்கு விட்டு அந்த ஊதியத்தால் பிழைப்பவனும், தனது பாப கன்மங்கள் தொலைய ஒருவன் கொடுக்கும் தானத்தை வாங்கி உண்பவனும்; விற்கக்கூடாத சோறு முதலிய உணவுப் பண்டங்களை விற்றுப் பிழைப்பவனும், வசியம் முதலான மந்திர சித்திகளைச் செய்து வயிறு பிழைப்பவனும்;

பிறர் செய் சமயச் சடங்குகளைச் செய்பவனும், சிவாகமம் முதலிய சிவ நூல்களைப் பணம் கொடுத்துப் படிப்பவனும், பணம் வாங்கிக்கொண்டு படிப்பவனும்; மேற்கொண்ட விரதத்தை முற்ற முடிக்கும் ஆற்றல் இல்லாதவனும்; வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத்தைத் தமது நிலையாகப் பெற்றிருந்தும் வேற்றுச் சமயங்களை விரும்புபவனும், அவைகளே முக்திநெறி என்று முடிவுகட்டியவனும்; அறிவாராய்ச்சிக்காகத் தருக்கம் பேசுவதன்றிக் குதர்க்கம் பேசித் திரிபவனும்; அந்தணர்; ஞான குரு; வித்தியாகுரு பசுக்கள் ஞானிகள் இவர்களிடத்து அன்பு செய்யாமல் நிந்தித்துத் தீமை செய்பவனும், அரசநிந்தை செய்பவனும்; பிதிருதேவதைகளுக்குச் சிரார்த்தம், தர்ப்பணம் முதலியன செய்யாதவனும்; ஒழுக்கமில்லாதவனும்; புண்ணியமாவது, பாவமாவது, சொர்க்கமாவது நரகமாவது என்கின்ற நாத்திகனும், பகலிலும் பூர்ணா அமாவாசை முதலிய புண்ணிய காலங்களில் நீரிலும் தன்மனைவியைப் புணர்பவனும், இழிந்த புணர்ச்

சியை விரும்புபவனும், நட்பினரைப் பிரிப்போனும், புறச் சமயத்தார் அவரவர்கள் சமயத்தில் அன்புடையவர்களாய் இருப்பின் அவர்களுக்குத் தீமை செய்பவனும்; பொதுவான குளக்கரை, ஆற்றங்கரை, கிணற்றங்கரை இவற்றை இடிப்பவனும், தமக்குத் துணை செய்யும் தேவாலயங்களை இடிப்பவனும் பிடுங்கிக்கொள்பவனும், கிடைத்தது அமுதமேயாயினும் எல்லோருக்கும் கொடுத்து உண்ணாமல் தானே தின்பவனும், இரக்கமில்லாதவனும் ஆகியவர்கள் அனைவரும் உபபாதகர்கள். பெண்களும் இந்தக் குணங்களை உடையவராயிருப்பின் அவர்களும் பாதகர்களே.

வாராய் அகத்திய முனிவரே! உனக்கு இன்னும் சில பாப பேதங்களைச் சொல்லுகிறோம் கூர்ந்து கவனிப்பாயாக.

அந்தணர் தலைவர்கள், தாபதர்கள், கன்னிகைகள், இவர்களுக்குத் துன்பம் செய்தவனும், பிறர் செல்வத்தையும், அழகு முதலியவற்றையும் கண்டு இகழ்ந்து பேசுபவனும்; பிறர் செய்யும் தான தர்மங்களைக் கண்டு மனம் பொறுக்காதவனும்; உழைத்துத் தேடி தனக்கென்று ஒதுக்கிவைத்த பிறர்பொருளை அரசனுக்குக் காட்டிக் கொடுத்தவனும், இவ்வளவு பணமா என்று மனம் புழுங்குபவனும்; கற்புடைய மங்கையர்போகும் போது காலித்தனமான பாட்டுக்களைப் பாடுகின்றவனும்; குணவான்களைக் குற்றம் சொல்பவனும், கோவில், யாகசாலை, குளம், ஏக வீதி, நிழல் தரும்மரத்தடி: மலை மலையடிவாரம், பூம்பொழில், நந்தவனம், கல் நீர், மணல் குன்று கோயிலெல்லை, வழி, சுடுகாடு, வீடு, பசும் புற்றரை, தும்பைச் செடி முளைத்தவிடம், முனிவர்கள் நடமாடுமிடம், தியானிக்குமிடம், உப்பளம், கடற்கரை, வயல், புற்றடி, காடு, கோமயம், கோமயச்சாலை, ஆகிய இவ்விடங்களில் மலசலம் கழிப்பவனும், நாடோறும் விடாமல் கள் குடிப்பவனும், கூத்து, பாட்டு இவைகளை விரும்புகின்றவனும், கூத்தாடியும், நீரிலே நீந்தி விளையாடுபவனும், பெரியோர்க்குக் குற்றம் கண்டுபிடிப்பவனும்;

பலபேர் நடக்கும் வழிகளில் முள்வேலி இடுபவனும், இளைத்தவன் மனை, மனைவிகளைக் கவர்ந்துகொள்பவனும், நல்லவர்கள் சொல்லக் கூசும் சொற்களைக் கூறுகின்றவனும், அந்தக் காரியங்களைப் பிறர் காணச் செய்பவனும், பகைவர்களை மறைந்து நின்று கொல்பவனும், இருவர் பகைத்தவிடத்து கிடைத்தவரையில் பிடுங்கித் தின்னும் பேய் போன்றவனும், நடுநிலை தவறிப்பேசுபவனும், கொலைக்கருவிகளைச்செய்துகொடுப்பவனும்,

தனது சிப்பந்திகளிடம் இரக்கமில்லாதவனும், அடிக்கடி கோபிப்பவனும், பசுக்களை அடிப்பவனும், பொய் கூறுபவனும், பிறர் பொய் சொல்லக் கேட்பவனும், தன் எசமானனுக்குத் துரோகம் செய்பவனும், ஞானசாரியனுக்குப் பொல்லாமை சொல்பவனும்; பொருள் முதலியவற்றைக் கவருவதற்காக மயக்க மருந்திடுபவனும், மாதாபிதா பசித்திருக்கத் தான் உண்ணுபவனும், ஆசாரியன், குரு முனிவர்கள் இவர்களுக்கு முன்பே உண்ணுபவனும், வேதாகமநெறி ஒழுகாமல் தானே சன்னியாசம் முதலான ஆசிரமதருமங்களைக் கற்பித்துக்கொள்ளுபவனும், நோயால் பசுக்கள் வருந்த அதனைப் போக்காதவனும், மிகுந்த பாரத்தை ஏற்றி அது இழுக்க முடியாதபோது அடித்துத் துன்புறுத்துபவனும், எருதுகளைக் காயடிப்பவனும், புழுபூச்சி எறும்புகள் இறந்து போகுமே என்று அஞ்சி மெதுவாக நடவாதவனும், ஊண் உண்ணுபவனும் அதற்காகக் கொலை செய்பவனும், கொலையைக் கண்டிரங்காதவனும், தடுக்காதவனும் உயர்ந்த குலத்தில் பிறந்திருந்தும் குலத்திற்கேற்ப நடக்காதவனும், பாபம் செய்யப்பயப்படாதவனும், யாகம் முதலியன செய்யாத அரசனும், குடிகளைக் கொடுமைப்படுத்தி வரிகளை வாங்குபவனும், இவை போன்ற பாபங்களைச் செய்பவர்கள் அனைவரும் உபபாதகர்கள் ஆவார்கள்.

கேளாய் முனிவனே! இதுவரையில் நாம் பாதகம், அதிபாதகம், மகாபாதகம் உபபாதகங்களையும் அவற்றோடொத்த பாபங்களையும் சொன்னோம். இனி இவைகளைச் செய்தோர் எய்தும் பயன்களாகிய சொர்க்க நரகங்களைப் பற்றி முருகப் பெருமான் கூறுவாராயினர்.

(இவையனைத்தும் சிவதருமோத்திரம் ஆருவது பாவ இயலில் உள்ள முப்பத்து மூன்று முதல் நூற்று மூன்று வரையிலுள்ள கவிதைகளின் சுருக்கக் குறிப்பாகும்.) (தொடரும்)

---

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkali.

"Visited the temple on 25—4—73. Maintenance and upkeep of the temple excellent. A magnificient temple. Most impressive."

(Sd.) S. Jayapandiyan,
Special Officer, Temple lands,
Madras.

25—4—73.

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில் பெருவிழாவை யொட்டி நிகழ்ந்த திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு 14—5—73 திங்கட்கிழமை முதல் தொடங்கி 24—5—73 வியாழக்கிழமை முடிய உள்ள நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. சங்கத் தமிழ், சைவத் தமிழ், பிரபந்தத் தமிழ், தருமைத் தமிழ் என்ற பகுப்பில் விரிவுரைகளும், பொம்மலாட்டம், நாட்டிய நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. மாநாட்டின் தொடக்கத்தில் திருமுறைப் பாடல்கள் பண்ணிசைவாணர்களால் பாடப்பட்டன.

## 14—5—73 திங்கட்கிழமை, சங்கத்தமிழில் :

வைத்தீசுவரன்கோயில், ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளின் வரவேற்புரையோடு மாநாடு தொடங்கிற்று. சென்னை, உயர்மன்ற நீதிபதி மாண்புமிகு. திரு. வி. வி. இராகவன் பி. ஏ., பி. எல்,. அவர்கள் தொடக்கவுரையின்போது, "தருமையாதீனத்தில் தற்பொழுது ஞானபீடத்தில் எழுந்தருளி ஞான அரசு செலுத்தும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் இங்கேயே படித்துப் பட்டம் பெற்றுப் புலமை மிக்கவர்களாய் விளங்குகிறார்கள். தேவாரபாடசாலை, வேத சிவாகமபாடசாலை முதலியவற்றின் மூலமாகக் கல்விப்பணிசெய்து வருகின்றார்கள். சமய வளர்ச்சிக்கு நல்லபல திட்டங்களை வகுத்துச்செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளார்கள். இங்கு இருமொழியும் வளர்க்கப்படுவதால் சமஸ்கிருத துவேஷம் இல்லாமல் இருக்கிறது. ஸ்ரீ குருஞான சம்பந்தரால் நிறுவப்பெற்றது இத் தருமையாதீனம் : அவர்கள் தமது ஞானநூல்கள் வாயிலாக அருளிய சித்தாந்தக் கருத்துக்களை வெளியிட மாநாடு நடத்தப்பெறுகிறது. இம்மாநாட்டைத் தொடங்கிவைத்ததற்குச் — சந்தோஷப்படுகிறேன்" என்று குறிப்பிட்டார்கள்.

மதுரைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத்தலைவர் செந்தமிழ் வித்தகர் திரு. அ. ச. ஞானசம்பந்தம் எம். ஏ. அவர்கள் "சங்கத் தமிழில் வாழ்வியல்" என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையில், "சமயக் கருத்துக்கள் அண்மைக் காலத்தில் தோன்றியவை அல்ல, மிகப் பழங்காலம் முதலாகவே சமயக் கருத்துக்கள் உள்ளன. சங்ககாலம் கிறிஸ்து பிறப்பதற்கு நானூறு ஆண்டுகட்கு முன்னே உள்ளகாலம். மிக மிக நாகரீகம் உடைய மக்கட் சமுதாயம் வாழ்ந்த காலம். ஐந்து அல்லது ஆறுயிரம் ஆண்டுகள் வாழ்ந்தால்தான் மக்கள், நாகரிக வாழ்க்கை வாழ

இயலும். சங்ககாலமக்கள் வாழ்க்கையில், அகவாழ்க்கை புற வாழ்க்கை என்ற பாகுபாடுகளைப் பரக்கக் காணலாம். அகம் பற்றிய பாடல்கள் மிகுதியாகவும், புறம்பற்றிய பாடல்கள் குறை வாகவும் உள்ளன" என்று குறிப்பிட்டார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், திருக்குறள் ஆராய்ச்சித் துறை, தருமையாதீனப்புலவர், மகாவித்துவான் திரு. ச. தண்ட பாணிதேசிகர் அவர்கள் "சங்கத் தமிழில் சமய நெறி" என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையில், "வாழ்வியலின் முதிர்ந்த முதிர்ச்சிதான் சமய நெறி. வாழ்வியலில் கடைந்தெடுக்கப்பெற்ற ஒன்று சமய நெறி. வாழ்வியலுக்குத் திணைகளும் நிலங்களும் வகுக்கப்பெற்றன. அவற்றிற்கேற்ப தெய்வங்களும் வகுக்கப் பெற்றுள்ளன. "நீலமேனிவாலிழை பாகத்து ஒருவன்" என்று தொடங்கும் ஐங்குறு நூற்றுப் பாடல் மூலம் உலகத் தோற்றம் கூறப்படுகிறது. இறைவனின் திருவடி நிலையிலேயே மூவகை உலகும் முகிழ்ந்தன என்பதைச் சங்க இலக்கியம் விளக்கு கிறது. அந்தந்த மக்களும் தாங்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கேற்ப சமயநெறியைப் பின்பற்றினர்கள்" என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்து நன்றியுரைக்குப்பின்னர் மார்க்கண்டேயர் வர வாற்றுப் பொம்மலாட்ட நிகழ்ச்சியோடு கூட்டம் இனிதே நிறை வுற்றது

## 15—5—73 செவ்வாய்க்கிழமை, சங்கத்தமிழில்:

திருநள்ளாறு,ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரசுவாமி தேவஸ்தானம் கட்டளை விசாரணை வித்துவான். ஸ்ரீமத் சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரைக்குப்பின்னர், சென்னை உயர்மன்ற நீதிபதி மாண்புமிகு திரு கே. எஸ். வெங்கட்ராமன் ஐ. சி. எஸ். அவர்கள் ஆற்றிய சிறப்புரையில் :-

"ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானம் அவர்களைப் பல ஆண்டுக்காலமாக நான் நன்கு அறிந்தவன். தெய்வபக்தி, ஞானம், அறிவு, வித்வத் தன்மை உடையவர்கள், முன்பு ஒருமுறை இங்கு வந்திருக் கிறேன். தெய்வபக்தி உள்ளவன் என்ற முறையில் இங்குப் பேசவந்துள்ளேன். அறிவு ஒரு சமயத்தில் பக்திசெலுத்தத் தடையாகக்கூட இருக்கும். அதனால் அறிவோடு கடவுள் பக்தி யும் வேண்டும். கடவுள் உணர்வு வேண்டும், கடவுள் உணர் வைப்பெற கல்வி அறிவு ஓரளவுதான் பயன்படும். உணர்ச்சி அன்பு இவைதான் கடவுள் பக்திக்குத்தேவை; கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை தேவை" என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்து, அரச்சலூர் அ. உ. பள்ளித் தமிழாசிரியர் வித்துவான். திரு. சி. சம்புலிங்கம் அவர்கள் "அறநெறி" என்ற தலைப்பில் ஆற்றிய விரிவுரையில்:

"மக்களிடத்தில் பண்பாடு இல்லையானால் அறநெறியைப் போற்றமாட்டார்கள். அறநெறியைப் பின்பற்றி மனிதப்பண்பாட்டை உருவாக்குவதே சங்கத்தமிழில் கூறப்பட்டுள்ள அறநெறி. அறம் செய்யக் கடவுள் பற்று தேவை" என்று விளக்கினார்கள். பின்னர், திருச்சிராப்பள்ளி தேசியக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. இரா. இராதாகிருஷ்ணன் எம். ஏ., அவர்கள் கலைத்திறன்பற்றிப் பேசுகையில் "முத்தமிழ்ப் பாகுபாடுகள் கலை உணர்வோடு வகுக்கப்பெற்றன. கலையைத் தொழிலாகக் கொள்பவன் கலைஞனாகமாட்டான். சங்ககால மக்கள் ஊதியம் கருதாமல் கலைக்காக வாழ்ந்தனர். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் நாளோலக்கம் சென்ற புலவர் ஒருவர் "பணியியர் அத்தை நின்குடையே" என்ற பாடல் மூலம் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நால்வகைப் புருஷார்த்தங்களையும் பெற வாழ்த்தியகலைத்திறனைப் பலமேற்கோள்களுடன் விளக்கினார்கள்.

**16—5—73 புதன்கிழமை, சங்கத்தமிழில் :**

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம், வித்துவான். ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அன்றைய நிகழ்ச்சியில் பங்குகொள்ளும் அனைவரையும் வரவேற்றார்கள்

அடுத்து, சென்னை, தொழில்துறைக் குற்ற இயல் முன்னாள் நீதிபதி திரு. பி. எஸ். சிவகுருநாதன் பி. ஏ. பி. எல். அவர்கள் ஆற்றிய சிறப்புரையில் "சமயவாழ்வில் அரசு தலையீடுசெய்தல் கூடாது என்பது அரசியல் சட்டம். ஆங்கில அரசு இதனைக் கண்டிப்புடன் கடைப்பிடித்தது. நம் நாட்டில் அரசு, சமயநெறிகளில் தலையிடுவதை மக்கள் தடைசெய்யவேண்டும்" என்று குறிப்பிட்டார்கள்.

சென்னை, இராமலிங்கர் பணிமன்றம் திரு. ஔவை. து. நடராசன் எம். ஏ. எம். லிட். அவர்கள் "அரசியல்" என்பது பற்றி ஆற்றிய விரிவுரையில் "சங்ககாலமன்னர்களின் அரியணையில் மன்னர் முடிமேல் விளங்கிய வெண்கொற்றக்குடை, உயிர்கட்குத் தண்ணளி செய்து அரசோச்சுவதைக் குறிப்பது. குடிபழிதூற்றுது கொற்றம் கொண்டனர் மன்னர்கள். சங்கநூல் என்றால் பத்துப்பாட்டு எட்டுத்தொகைகளைக் குறிக்கும்; அந்நூல்களின் மூலம் அக்கால மக்கள் சமய நெறியைப் பின்பற்றியதைக் காணலாம்" என்று விளக்கினார்கள்.

மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. அ. கலியபெருமாள் எம். ஏ., அவர்கள் 'ஒருமைப்பாடு' என்பது பற்றிப் பேசுகையில், "யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலக ஒருமைப்பாட்டைக் கண்டவர்கள் தமிழ்மக்கள்" என்று குறிப்பிட்டார்கள்.

(தொடரும்)

திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி
தேவஸ்தானம்
சித்திரைத்திங்கட் பெருவிழாவில் :



திருக்கல்யாணத் திருக்கோலத்துடன் நிகழ்ந்த
திருவீதியுலாவில், தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
அவர்களும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகளும்
உடன் எழுந்தருளல்.


திருப்பனந்தாள், ஸ்ரீ காசிமடம்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமார சுவாமித் தம்பிரான்
சுவாமிகள்



தருமையாதீனம்
26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
அவர்களை
கொலு வீற்றிருக்கச்செய்து வழிபாடாற்றுதல்.




26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள்
குருமூர்த்தவழிபாட்டிற்கு எழுந்தருளல்.



26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள்
பட்டணப்பிரவேசத்திற்கு எழுந்தருளல்.

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவில்:



26-ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
அன்பர்கள் புடைசூழபட்டணப்பிரவேசத்திற்கு எழுந்தருளல்.



26-ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
சமயப்பயிற்சி வகுப்பைத்தொடங்கிவைத்து அருளாசி வழங்குதல்.

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவில் :



26-ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
பட்டணப்பிரவேசம்

# சிந்தைக் கலசம்

## நீதிபதி, கனம். S. மகராஜன் B. A., B. L,

வானவெளிக் கப்பலில் முதன்முதலாகப் பயணம் செய்து விட்டுப் பூமிக்குத் திரும்பி வந்தார் ஒரு ரஷ்ய விஞ்ஞானி. பேட்டி காணச்சென்ற பத்திரிகை நிருபர்களிடத்திலே அவர் எக்காளமாகச் சொன்னார்: "வானத்திலே எங்கெங்கெல்லாமோ சுற்றிப் பார்த்துவிட்டேன். ஆனால், கடவுள் என்ற ஆசாமி எங்கும் என் கண்ணுக்குத் தென்படவில்லை" என்றார்.

உள்ளத்துக்குள்ளேயே இறைவனை வைத்துக்கொண்டு, அகவெளியை மறந்து புறவெளியிலே இறைவனைத் தேடுகிறார்களே, அவர்களைப்பார்த்துத் திருமூலர் சொல்லுகிறார்:

"உள்ளத்தி னுள்ளே உளபல தீர்த்தங்கள்
மெள்ளக் குடைந்து நின்றாடார், வினைகெட,
பள்ளமும் மேடும் பறந்து திரிவரே
கள்ள மனமுடைக் கல்வியில் லோரே."

ஒரு விஞ்ஞான மேதையைப் பார்த்து, அதுவும் வானவெளியைச் சுற்றி வந்த விஞ்ஞான மேதையைப்பார்த்து, "கள்ள மனமுடைய கல்வியில்லாதவன்" என்று தயவு தாக்ஷிண்யம் பாராமல் பேசுகிறார் திருமூலர்.

திருமூலரைக் காட்டிலும் கடுமையானவர் சிவவாக்கியர். அசட்டுப் பேச்சைக் காதால் கேட்கவே முடியாது அவரால். அந்த விஞ்ஞானியைப் பார்த்து சிவவாக்கியர் சொல்லுவதைப் பார்ப்போம்.

"உறியிலே தயிர் இருக்க
உள்புகுந்து வெண்ணெய் தேடும்
அறிவிலாத மாந்தரோடு
அணுகு மாற தெங்ஙனே!"

"வீட்டுக்குள்ளே இருக்கிறது உறி. உறிக்குள்ளே இருக்கிறது தயிர். அந்தத் தயிரை எடுத்துக்கடையவேண்டியதுதான்

பாக்கி; உடனே வெண்ணெய் கிடைத்துவிடும். இதைச்செய்யாமல் வெண்ணெய்தேடி ஊர்ஊராய் அலைகிறாயே, வானவெளியை வேறு சுற்றுகிறாயே, உன்னுடைய சமர்த்தை என்னவென்று சொல்லுவது! உன்னோடு பேச்சு வைத்துக்கொள்வதே தப்பு.'' என்று கடிந்துகொள்ளுகிறார் சிவவாக்கியர்.

அப்படியானால், இறைவன் உள்ளத்துக்குள்ளேயே இருக்கிறானா? போயும்போயும் இருப்பதற்கு மனித உள்ளந்தானா கிடைத்தது இறைவனுக்கு? அங்கேபோய் அமர்வதற்கு என்ன காரணம்? என்றெல்லாம் கேட்கிறோம். பதில் சொல்லுகிறார் திருமூலர் :

> " கள்ளப் பெருமக்கள்
> காண்பர் கொலோ என்று
> உள்ளத்தி னுள்ளே
> ஒளித்திருந்து ஆளுமே "

வேடிக்கைப் பிரியனாகிய இறைவன், மனிதனோடு கண்ணாம் பொத்தி விளையாடுகிறான். கண்ணாம்பொத்தி விளையாடும்போது எல்லோரும் எதிர்பார்க்கும் இடத்திலே ஒளிந்தால், விளையாட்டில் ரஸமில்லாதுபோய்விடுமே! ஆகையால், மனிதன் எளிதில் கண்டுபிடிக்க முடியாதஇடம் அவன் மனம்தான், அங்கே போய் ஒளிந்துகொள்வோம் என்று தெளிந்து, அவன் உள்ளத்துக்குள்ளே போய்ப் பதுங்கிக்கொண்டானாம்.

" சிந்தைக் கலசத்து எழுகின்ற மாசக்தி " என்று இறைவனைப் போற்றுகின்றார் திருமூலர். ஒளிந்திருக்கும் இடம் நம்முடைய சிந்தைதான், வானவெளியல்ல என்று தெரிவதற்கே யுகக்கணக்காகி விடுகிறது. ஆனால், இருக்கும் இடம் தெரிந்த பிறகு இறைவனோடு உறவாடுவது எளிதாகிவிடுகிறது.

தன் மனத்தைத் தன் மனத்துக்குள்ளேயே செலுத்தித் தேடத் தொடங்குகிறார் திருமூலர். கலங்கிப்போயிருந்த சிந்தை, கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிவடைகிறது. சிந்தைக் கலசத்தினுள்ளிருந்து சிவம் மெல்ல மெல்ல வெளிப்படுவதைக் காண்கிறார்.

> " சிந்தை தெளியத் தெளிய வல்லார்கட்குச்
> சிந்தையினுள்ளே சிவனிருந்தானே "

என்று ஒலமிடுகிறார் திருமூலர்.

இப்படியாக, இறைத்தத்துவத்தைக் கண்டுபிடித்தவுடன் அவருக்கு என்றுமில்லாத துணிச்சல் ஏற்பட்டு விடுகிறது.

" ஆராலும் என்னை அமட்ட வொண்ணுதினி "

என்ருர். ஒரு பயலுக்கும் அஞ்ச வேண்டியதில்லையாம். ஏன் ?

" சீரார் பிரான்வந்து என் சிந்தை புகுந்தனன் "

முன்னமேயே சிந்தையிலிருந்தவன்தான். ஆனல், இப்போதுதானே என் சிந்தையிலிருக்கிருன் என்று நான் உணர்ந்தேன். ஆகையால், அவன் என் சிந்தையில் புகுந்துவிட்டான் என்றே சொல்ல வேண்டும் இதன் விளைவு என்ன ?

" சீராடி அங்கே திரிவதல்லால், இனி
ஆர்பாடும் சாரா அறிவறிந்தேனே "

தன் நிறைவு வந்துவிட்டது. இன்னெருவனைச் சார்ந்து நிற்கவேண்டிய அவசியம் இல்லை. சார்பு கெட்டுவிட்டது. ஆகவே, ஒழிந்தது அச்சம்; ஏன் பாடமாட்டார்?

" ஆராலும் என்னை அமட்ட வொண்ணுதினிச்
சீரார் பிரான்வந்து என் சிந்தை புகுந்தனன்
சீராடி அங்கே திரிவதல்லால் இனி
ஆர்பாடும் சாரா அறிவறிந்தேனே."

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமையாதீனம்

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

" Visited the temple with my family. We are really impressed with the magificence of the sacred temple. The temple is well kept up."

(Sd.) M. Damodaran,
Asst. Commissioner (Excise),
Cuddalore.

# குறைதீர்த்த குமரன்

## திருமதி. மரகதம்

தன் பூஜையை முடித்த மங்களம் கந்தனின் திருமுன்பு கண்மூடி அமர்ந்திருந்தாள். அவள் நெஞ்சம் நெகிழ்ந்து, உணர்ச்சிவசப்பட்டு முருகன் தியானத்தில் ஆழ்ந்து இருந்தாள். இன்று குமரனின் பதினெட்டாவது பிறந்தநாள். கந்தனின் அருளால் அல்லவா அவன் பிறந்தநாளைச் சிறப்பாகக்கொண் டாட முடிகிறது! காலையில் விசேஷமான பூஜை முருகனுக்கு நடத்தியபிறகு, தன் செல்வனுடன் திருக்கோயிலுக்குச் சென்று அர்ச்சனை முடித்து வர எண்ணி பூஜையில் கலந்துகொண்ட குமரனுக்காகக் கந்தனை வேண்டி நெற்றியில் திருநீறு இட்டாள்.

"குமரா! கோயிலுக்குச்செல்ல நாழியாகிவிட்டது; குருக்கள் காத்திருப்பார்கள்; சீக்கிரம் சென்றுவரலாம்" என்று கூறிப் பூஜை அறை வேலையை முடித்துக்கொண்டு பூக்குடலையுடன் கிளம்பினாள்.

"சம்பத்து! அர்ச்சனை சாமான்களை எடுத்துக்கொண்டுவிட் டாயா?" என்று தன்னிடம் வேலைபார்த்த பையனை அழைத்துக் கேட்டாள். சம்பத்து 15 வயது நிரம்பியவன். அவனுக்கு யாரும் ஆதரவு இல்லாததால் மங்களத்திடமே இருந்துவந்தான். வீட்டில் சிறு வேலைகளைக் கவனித்துக்கொண்டு பள்ளி சென்று படித்துவந்தான்.

மூவருமாகக் கோயில் சென்றனர். தயாராகக் காத்திருந்த குருக்கள், "அம்மா! முதலில் விநாயகர், வைத்தியநாதன்; தையல்நாயகி, அங்காரகன் முதலியோருக்கு அஷ்டோத்திர சதநாம அர்ச்சனை முடித்துப் பிறகு முத்துக்குமாரசுவாமிக்கு சண்முகார்ச்சனையை ஆரம்பிக்கலாம்" என்றார்.

"அவ்வாறே அஷ்டோத்தரம் முடித்துவிடுங்கள். சண்முக அர்ச்சனையை நிதானமாகச் செய்யலாம்!" என்று கூறினாள் மங்களம்.

அர்ச்சனைகள் முடிந்ததும் முத்துக்குமாரசுவாமிக்குத் தீபாராதனைகள் தொடங்கப்போகும் நேரம், அன்று கந்தர் சஷ்டி உத்ஸவத்தின் மூன்றாம்நாள். குமரனுக்கு அலங்காரம் மிகவும் அழகாகச்செய்திருந்தார்கள். "ஓம்" என்னும் எழுத்தில் வள்ளி தெய்வயானையுடன் சேர்ந்து புட்பத்தாலும் நகையாலும் அலங்கரித்திருந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தன்னை மறந்து முத்துக்குமாரனின் எழில் உருவில் சிந்தனை வயப்பட்டுநின்ற மங்களத்தின் காதுகளில் குருக்கள் கொடுத்த குரல் விழவில்லை.

சாஸ்திரிகள் அருகில்வந்து "அம்மா! தீபாராதனை ஆரம்பிக்கலாமா?" என்றார்; உலக நினைவுக்கு வந்தாள் அவள். ஆறு குருக்களுடன் ஆறு அடுக்கு தீபாராதனைகள் ஆறு சாஸ்திரிகளின் மந்திர ஒலியோடு நடந்தன. காது குளிரக் கேட்டுக் கண்குளிரத் தரிசித்து நின்றாள் மங்களம். முத்துக்குமரனின் மாலையிலிருந்து ஆசீர்வதிப்பதுபோல் ரோஜாப்பூ இதழ்கள் சொரிந்தன.

அதைக் கவனித்திருந்த குருக்கள் பிரசாதத்தட்டுடன் பூ இதழையும் கொடுத்து, "அம்மா! தாங்கள் எண்ணிய எண்ணம் ஈடேறும்; குமரன் தங்களுக்கு ஆசி வழங்கியுள்ளான்" என்றார். மங்களம் பதில் கூறுமுன் அருகிலிருந்த சாஸ்திரிகள், "முத்துக்குமரன் அருள் என்றுமே அவர்களுக்கு உண்டு. அவர்களின் குமாரனது பயங்கர நோயைப் போக்கி, உயிர் கொடுத்துக் காப்பாற்றிய முருகனுக்கு அம்மாவும் முருகனிடம் தன் அன்பை அவர்களால் முடிந்தவரை நன்றியாகச் செலுத்திவிடுகிறார்கள். அம்மாவின் அன்புக் காணிக்கையை ஏற்றுக்கொண்டேன் என்று தான் முத்துக்குமரன் நல்ல புஷ்பம் கொடுத்து அருள்காட்டியிருக்கிறான்" என்று கூறினார்.

"எல்லாம் முத்துக்குமரன் செயல்! குமரனை முத்துக்குமாரனிடம் ஒப்படைத்துவிட்டேன்; குமரனைக் காப்பாற்றுவது முத்துக்குமரன் கடமை" என்று கூறினாள் மங்களம்.

கோயிலிலிருந்து வீடு திரும்பினார்கள். தன் குமாரனுடன் திரும்பியவளுக்கு நினைவெல்லாம் சாஸ்திரிகள் சொன்ன வார்த்தைகளிலேயே லயித்துவிட்டது.

வீடுவந்ததும், "அம்மா! கல்லூரிக்கு நாழியாகிவிட்டது" என்று சொன்ன குமரன், தாயின் எண்ணத்தைத் தன் பக்கம் திருப்பினான். அம்மாவின் நினைவு பழைய நினைவில் சென்று

விட்டது. பேச்சுக்கொடுத்தால்தான் தன் பக்கம் அவள் கவனம் செல்லும் என்று அழைத்து அவனை நமஸ்கரித்தான். அவனை வாரி எடுத்த மங்களம் தன் கண் கலங்க ஆசீர்வதித்து அவன் நெற்றியில் திருநீறு பூசினுள்.

"ஏன் அம்மா வருத்தப்படுகிருய்?" என்று கேட்ட குமர னுக்கு, "இல்லையடா குமரா! இது ஆனந்தக்கண்ணீர். முருகன் அருளால் அல்லவா உன் பிறந்தநாள் கொண்டாடும் பாக்கியம் கிட்டியது! என்றும் உனக்கு முருகன் அருள் துணை நின்று நல் வாழ்வை அளிக்கவேண்டும்; ஆயுள் கொடுத்த முருகனை என்றும் மறக்காதே! என்றும் பக்தியோடு நீ இருக்கவேண்டும்" என்று கூறினுள். "நீ கவலைப்படாதே அம்மா! நான் என்றும் முருகன்மேல் கொண்ட அன்பு மாருமல் இருப்பேன்" என்ருன்.

குமரனுக்கு விருந்து உணவையும், நைவேத்தியங்களையும் சாப்பிடவைத்தாள். உணவு உண்ட குமரன் கல்லூரிக்குச் சென்ருன். சம்பத்துக்குச் சாப்பாடுபோட்டுப் பள்ளிக்கு அனுப் பியபிறகு பழமும், காப்பியும் சாப்பிட்டு முருகன் தோத்திரப்பா மாலையுடன் வந்து கூடத்தில் அமர்ந்தாள் மங்களம். கந்தர் சஷ்டி ஆறு நாட்களும் பழம், பால், காப்பி மட்டுமே சாப்பிடுவாள்.

தோத்திரப் பாமாலையைப் படிக்கத் திறந்ததும் 'முன்நின்று காட்சி கொடுப்பான்! முன்னே நின்று நம்எண்ணம் முடிப்பான்!' என்ற அடிகளில் கண்கள் செல்லக் கருத்தும் சென்றது. ஆம்! முருகன் அவள் மனக்கண்முன் நின்று காட்சி கொடுக்கிருன். கேட்ட வரங்களைக் கொடுத்தான். கொடுக்கின்ருன் - பலவகை களில் அருள்புரிந்து கொண்டு இருக்கின்ருன். எத்தனையோ விதங்களில் ஏற்பட்ட இடுக்கண்களைப்போக்கி அவள் மனம்,கண் கலங்காமல் ஒவ்வொரு காரியத்தையும், ஈடேற்றி இருக்கிருன்.

வாழ்க்கையின் பின் ஏடுகளைப் புரட்டியது அவள் மனம். முருகனிடம் கொண்ட அன்பால், பழைய ஏடுகள் பலவற்றைக் கூறின. அதிலும் குமரனுக்கு வந்த பயங்கர நோயை நீக்கினுனே முத்தையன். வைத்தியர்களுக்குப் புரிபடாத பயங்கரமான வலிப்பு நோய். ஆரம்பத்தில் ஆறு வயதில் பசி தாளாது சில சமயம் சாப்பாட்டுக்கு நேரமாகும்போது மயக்கமாகிவிடுவான். பதினெரு வயது வரை அவ்வாறு இருந்தது. உபாத்தி யாயனியாகக் காலம் கழித்து வந்த மங்களம் தன் மங்களசின்னங் களை இழந்தவள். சிறுவயதிலிருந்தே முருகனிடம் அளவற்ற அன்பு கொண்டவள். ஒவ்வொரு நாளும் தன் அலுவலுக்

கிடையில் முத்துக்குமாரசுவாமிக்கு அர்த்த யாமத்தில் நடக்கும் புனுகுகாப்பு வழிபாட்டுக்கு முடிந்தவரை சென்று;தரிசனம்செய்து தன் குறைகளைக் குமரனிடம் முறையிடுவாள். தன் வீட்டிலும் வெற்றிவேல் முருகனின் திருவுருவப்படம் வைத்துத் தினமும் பூஜித்து வந்தாள்.

மங்களத்திற்கு ஒரு பெண், ஒரு ஆண். பெண் கல்யாண மாகிக் கணவனுடன் வாழ்ந்து வருகிருள். குமரனையும், பெண் கற்பகாம்பாளையும் ஆளாக்க அவள் பட்ட பாடுகள் கொஞ்சமா? குமரனின் இரண்டு வயதிலேயே அவன் தந்தை நோயால் இறந்தார். பிறகு தன் தமையன் உதவியால் படித்து முடித்த மங்களம், இன்று வைத்தீஸ்வரன் கோவில் பள்ளியில் வேலை பார்த்துப் பெண்ணையும் படிக்க வைத்துவேலைக்கு அமர்த்தினுள்; திருமணமும் செய்து வைத்தாள்.

ஆனல் எட்டு ஆண்டுகள் குமரனல் தான் நிம்மதியின்றித் தவித்தாள். நான்கு ஆண்டுகள் குமரனின் வியாதி அதிகமாகி அளவுமிறி அவன் துன்பம் கண்டு மங்களம் துன்பப்பட்டாள்; துடித்தாள். கந்தனிடம் கதறினுள். தினமும் முத்துக்குமரன் சந்நிதிக்கு அழைத்துச் செல்வாள் குமரனை. செல்வமுத்துக்குமரன் சந்நிதியில் தீபாராதனை ஆகும் பொழுது குமரன் மயக்கமாகிக் கீழே சாய்ந்து விடுவான். கோவிலிலிருந்து தூக்கி வந்து. தான் பூஜை செய்யும் முருகன் முன் அவனைக் கிடத்தி விடுவாள், ஒரு மணி நேர அளவில் அசைவற்றுக் கிடப்பான். முருகனிடம் கண்ணீர் விட்டுக்கதறுவாள்.

" முருகா! வெற்றி வேலா! தேவர் குறை தீர்த்த தேவே! என்று என் குறை தீர்ப்பாய்? நீ அளித்த புதல்வன் அல்லல் உறுகின்ருன். அருளால் உலகில் அவனை வாழவிட வேண்டும். ஒன்று, திருவுள்ளமிரங்கினுல் வியாதி இல்லாமல் பக்தனுக வாழ விடு! இல்லையெனில் அளித்த நீயே அவனை எடுத்துக்கொண்டு விடு! அவனை வியாதியால் உலகில் வருந்தச் செய்யாதே " என்று வேண்டுவாள். சஷ்டி, கிருத்திகை, செவ்வாய் விரதங்கள் இருந்தாள். மனம் நொந்து நெஞ்சம் உருகி முருகன் பாமாலைகளைப் பாடினுள்.

குமரனின் வியாதியைப் பார்த்தவர்கள், " மந்திரிக்க வேண்டும்: சேஷ்டை " என்ருர்கள். " இது பயங்கர நோய்; வேலூர் செல்ல வேண்டும்" என்ருர்கள், தீபாராதனையின்போது வேண்டிநிற்கும் மங்களத்தைப் பார்த்து " என்ன கல் நெஞ்சம்!

எப்படி மனம் வந்து பையன் துன்பத்தைக் கண்டு மௌனத்தோடு கீழே விழும் அவனைத் தாங்காமல் இருக்கிறாள் " என்றார்கள். துணிந்த சிலர் மாந்திரீகம் வைத்தியம் செய்ய யோசனை கூறினார்கள்.

"முத்துக்குமரனின் குழந்தை குமரன்! அவனே குறையைத் தீர்க்க வேண்டும்: அல்லது படைத்தவனே: எடுத்துக் கொள்ளட்டும்; நான் எந்த வைத்தியமும் செய்யமாட்டேன்" என்று கூறி விட்டாள். அவள் உறுதியையும், அன்பையும், பக்தியையும் இரண்டு ஆண்டுகள் வியாதியின் துன்பத்தைப் போக்காமல் சோதித்தான் முத்துக்குமரன்.

முத்துக்குமர சுவாமியின் சந்நிதியில் ஒவ்வொரு நாளும் புலம்பி அழுதாள். ஒவ்வொரு வருடமும் தன் நிதிநிலைமைக்கு மீறி முத்தையனுக்குக் குமரனின் பிறந்த நாள் அன்று, சண்முக அர்ச்சனை செய்வதாகப் பிரார்த்தித்து ஒவ்வொரு வருடமும் செய்து வந்தாள். அர்ச்சனை அன்று குமரன் மயக்கமாகி விடுவான். வியாதியின் கொடுமை அதிகமாகி வருடமும் இரண்டு ஆயிற்று. அன்று முத்தையன் சந்நிதியில் அர்த்தயாம தரிசனம் முடித்த மங்களம், உணவு கொள்ளாமல் படுத்துவிட்டாள்.

மறுநாள் வழக்கம்போல் தரிசனம் முடிந்ததும் குமரன் மயக்கமாகிவிட்டான். அவனைத் தூக்கி வந்து பூஜைசெய்யும் முருகன் படத்தருகில் படுக்க வைத்தாள். "முருகா! முத்தையா! இப்பிணிக்கு நீ முடிவு அளித்தால்தான் உணவு உட்கொள்வேன்! இல்லையெனில் உணவு உட்கொள்ளாமல் உன் மலரடியை அடைவேன். என்னைச் சோதிக்காதே! முத்துக் குமரா! என்னை உன் பாதார விந்தத்தில் சேர்த்துக்கொள்"! என்று புலம்பினாள்.

மயக்கநிலை நீங்கிக் கண்விழித்த குமரன் அழுதான். மங்களம் சமாதானப் படுத்திய பிறகு "ஏன் அழுகிறாய்" என்று கேட்டாள். அவன் கண்ட கனவைத் தன் தாயிடம் கூறினான். "இருட்டு நேரம். வேல்முருகனின் அழகிய தோற்றம். பூஜையில் உள்ள வெற்றிவேலனின் உருவம்போல் தோன்றியது. 'நீ 48 நாட்களுக்குத் தொடர்ந்து என் புனுகு காப்பு தரிசனத்திற்கு வா; உன் வியாதி நீங்கிவிடும் என்று ஒருகுரல் எழுந்தது; உருவமும் மறைந்தது" என்றான். குமரனது கனவைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்த மங்களம், முருகன் அருளை எண்ணித்தன்னை மறந்து முருகன் நினைவில் ஆழ்ந்தாள்.

ஆம்! அவளுக்குத் தேவை என்ன ? முருகன் அருள்தானே! அது நிச்சயம் மங்களத்துக்குக் கிடைத்து விட்டது. முருகன் அவளுக்குத் தன்னிடம் அளவற்ற அன்பையும் பக்தியையும் உறுதியையும், நம்பிக்கையும் அளித்திருக்கிறான். அவன் அவள் நம்பிக்கையை வீணாக்காமல் அன்பை ஏற்றுக்கொண்டான். மங்கலம் இழந்த மங்களத்தைத் தன்னோடு ஐக்கியமாக்கிக் கொள்வான்! மங்களத்தைப்போல், மனத்தில் உறுதியும் தெய்வத்திடம் நம்பிக்கையும், பக்தியும், பிரார்த்தனையும் இருந்தால் அடைய முடியாததும் உலகில் ஒன்று உண்டோ!

---

இறைவனை வேண்டுவதும், பூசிப்பதும், பிரார்த்திப்பதும் மூட நம்பிக்கைகள் அல்ல ; உண்பதும்- பருகுவதும், அமர்வதும்- நடப்பதும் எவ்விதம் உண்மையான செயல்களோ அவற்றைவிடவும் அதிக உண்மையான செயல்களே அவைகள். அவைமட்டுமே உண்மையானவை; மற்றவை யாவும் பொய்யானவை என்று சொல்வதும் மிகையாகாது.

சாதனை இல்லாத சமய ஞானம், சோதனை ஏற்படும் காலங்களில் வெறும் உமியாகவே தோன்றுகிறது.

— மகாத்மா காந்தி சத்தியசோதனை.

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமையாதீனம்

ஸ்ரீ உக்தவேதீஸ்வரசுவாமி தேவஸ்தானம், குத்தாலம்.

தெய்வீக மணம் கமழும் இத்திருக்கோயிலைத் தரிசிக்கும் பெரும் பேறு கிடைக்கப்பெற்றோம். இவ்வாலய அலுவலர் அனைவர்க்கும் எங்கள் நன்றி.

(ஒ-ம்.) வ. சிவசுப்ரமண்யம்,

12—5—73. தலைமை ஆலயத் தணிக்கையாளர், சென்னை.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான், சிவாகமரத்னகரம்

**சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்**

( மலர் 32. இதழ் 6. பக்கம் 307 இன் தொடர்ச்சி )

திக்பலி என்பது பிரமமந்திர முதலான விடங்களில் அவ ரவர்களுக்குரிய தாளம், வாத்யம், கீதம், நிருத்தம், பண் இவைகளுடன் களிக்கச்செய்து பலிபோடுதல். அம்முறைப்படி,

ஒருநாள் உற்சவத்தில் முதல்நாள் சாயங்காலத்தில் ஆரம்பித்து மறுநாள் பிராதக்காலத்தில் தீர்த்தோத்ஸவத் தைச் செய்க. ஒருநாள் உற்சவத்தில் இரண்டுகாலம் பலி யிடுக.

தீர்த்த தினத்தை நியமித்துக்கொண்டு அதற்குமுன் சாயங்காலத்தில் ஆரம்பித்து மூன்றுநாள் உற்சவத்தைச் செய்து ஆறுகாலம் பலியிடுக. நான்காம்நாள் காலையில் தீர்த்த உற்சவத்தைச் செய்க.

இவ்வாறு ஐந்துதின உற்சவத்திற்குச் சாயங்காலத்தில் ஆரம்பித்துப் பத்துக்காலம் பலியிட்டு, ஆறும்நாள் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

தீர்த்த தினத்தை நியமித்துக்கொண்டு அதற்குமுன் சாயங்காலத்தில் ஆரம்பித்து, பதினெட்டுக்காலம் பலியிட்டு பத்தாம்நாள் காலையில் தீர்த்தோத்ஸவத்தைச் செய்க.

11 நாள் உற்சவத்தைச் சாயங்காலம் யாகாரம்பம் செய்து இருபத்திரண்டு காலம் பலியிட்டு பன்னிரண்டாம் நாட் காலையில் தீர்த்தோற்சவத்தைச் செய்க.

பதிமூன்றுதின உற்சவத்தைச் சாயங்காலம் முதலாய் இரு பத்தாறு காலம் பலியிட்டு, பதினன்காம் நாள் காலையில் தீர்த் தோத்ஸவத்தைச் செய்க.

15 தின உற்சவத்தைச் சாயங்காலம் ஆரம்பம் செய்து முப்பதுகாலம் பலியிட்டு பதினாறாம்நாட் காலையில் தீர்த்தோத்ஸவத்தைச் செய்க.

17 தின உற்சவத்தைச் சாயங்காலத்தில் ஆரம்பம்செய்து முப்பத்துநான்கு காலம் பலியிட்டு பதினெட்டாம்நாட் காலையில் தீர்த்தோத்ஸவம் செய்க.

27 நாள் உற்சவத்தை, சாயரக்ஷையில் தொடங்கி 13ம் தினம் காலை வரையில் கணேச யாகபூஜை செய்து கணபதிக்கு அபிஷேகம் செய்து 13ம் நாள் இரவு அஸ்திர யாகம் ஆரம்பித்து ஐந்து நாட்கள் செய்து 18 நாட் காலையில் அஸ்திர கும்பத்தை அபிஷேகம் செய்து அன்றிரவில் மஹாயாகம் தொடங்கி ஒன்பது தினம் மகாயாக பூஜை ஹோமம் செய்து 27ஆம் நாள்காலை தீர்த்தோத்ஸவம் செய்து யாககலசாபிஷேகமும் செய்க. — காரணாகமம்.

| திக்கு. | பண். | தாளம். | ராகம் | நிருத்தம். | வாத்யம். |
|---|---|---|---|---|---|
| இந்திரன் | காந்தாரம் | சமம் | பைரவி | புஜங்கம் | சாசபுடம் |
| அக்னி | கொல்லி | மத்தா வரணம் | வராளி | மண்டலம் | உத்கடிதம் |
| யமன் | கௌசிகம் | ப்ருங்கிணீ | ராமகிரி | தண்ட பாதம் | மிளித மட்டயம் |
| நைருதி | நட்டபாடை | மல்ல | பைரவி | புஜங்கத் ராஜம் | லம்புசம் |
| வருணன் | சீகாமரம் | நவ | தேசிக | குஞ்சிதம் | சிம்மநாதம் |
| வாயு | தக்கேசி | பலி | மகுட ராமகிரி | புஜங்க லளிதம் | ஜம்புடம் |
| குபேரன் | ,, | கொட்டரி | மாளவி | சந்தியா ரிடை | பஞ்சதாளம் |
| ஈசானன் | சாலாபாணி | டக்கரி | தேசாக்ஷி | ஊர்த்துவ பாதம் | கும்ப வாத்யம் |

இவ்வாறு நவசந்திகளிலும் பண் முதலியன பாடிப் பலி போடவேண்டும்.

உத்ஸவத்தில் செய்யப்படும் ஒவ்வொரு கிரியையும் சிருஷ்டி முதலிய ஒவ்வொரு கிருத்தியத்தையும் குறிப்பதால் அக்கிரியைகள் ஒவ்வொன்றும் ஆன்மாக்களின் மலத்தை நீக்கி வீடு பேறு அருளுவதற்காக வைக்கப்பட்டன என்று உணரப்படும்.

இம்முறையில் அனுக்ஞை, வாஸ்துசாந்தி, மிருத்ஸங்கிரஹணம், அங்குரார்ப்பணம், பேரீதாடனம், இரட்சாபந்தனம், விருபயாகம், அஸ்திரதேவதாவாஹனம் துவஜாரோஹணம், சந்தியாவாஹனம், யாகபூஜை, அஷ்டதிக்பலி, திருக்கல்யாணம் என்னும் கிரியைகள் சிருஷ்டியாகும்.

வாஹனோத்ஸவம், ஹோமம், பலி இவைகள் ஸ்திர கிருத்தியமாகும்.

மிருகயாத்திரை, இரதாரோஹணம், கிருஷ்ணகந்தம், என்பவை சங்காரம்.

சூர்ணோத்ஸவம், தீர்த்தம், அங்குரவிஸர்ச்சனம், யாக கும்பாபிஷேகம், அவரோஹணம், மௌனோத்ஸவம், சண்டயாகம் என்பவை திரோபாவம்.

சத்தியாத்திரை, சண்டேசோத்ஸவம், ஆசாரியோத்ஸவம், அனுக்ரஹமாகும்.

உத்ஸவத்தை சார்வத்ரிக தீக்ஷை எனக்கூறப்படுகிறது.

மஹோத்ஸவம் நாள் பத்தினுள் முதல்நாள் விழா தூல நீக்கத்தின்பொருட்டும், இரண்டாம் நாள் விழா தூல சூக்ஷ்ம நீக்கத்தின் பொருட்டும், மூன்றும் நாள்விழா மூவினையும், முக்குணமும், மும்மனமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் நீக்கத்தின்பொருட்டும், நாலாம் நாள் விழா நால்வகைத் தோற்றமும் நீக்கத்தின்பொருட்டும், ஐந்தாம் நாள் விழா ஐம்பொறியும், ஐந்தவத்தையும் ஐந்து மலமும் நீங்குதற்பொருட்டும், ஆறும்நாள் விழா காமாதியாறும், கலையாதியாறும், வினைக்குணமாறும், நீக்குதற்பொருட்டும், ஏழாம்நாள் விழா எழுவகைப் பிறப்பும் நீங்குதற்பொருட்டும், எட்டாம் நாள் விழா எண்குணம் விளக்குதற் பொருட்டும், ஒன்பதாம்

நாள் விழா மூன்றுருவும், முத்தொழிலும் மூன்றிடத்துறைதலும் இல்லை எனற் பொருட்டும், பத்தாம்நாள்விழா பரமானந்தக் கடலில் ஆன்மா அழுந்துதற்பொருட்டும், நிகழ்த்துவது.

—பிம்பாகமம்.

ஆன்மாக்களது கன்மத்திற்குத் தக்கவாறு பஞ்சகிருத்தியத்தைச் செய்தருளும் இறைவன் பல மூர்த்தங்களாகத் தோன்றி, அவர் அவர்களுக்குப் போக மோக்ஷங்களைக் கொடுத்தருளுகின்றுன். அம்மூர்த்தங்களுள் சில சயனிப்பனவும், சில நடப்பனவும், சில நிற்பனவுமாக உள்ளன. பூஜை செய்யும்போது அம்மூர்த்திகள் சுகாஸனமாய் இருந்துகொண்டே அப்பூசையை ஏற்கும். அம்மூர்த்திகளை ஆலயங்களில் ஆகம முறைப்படி பிரதிஷ்டை செய்து பூசித்துவருவது விதியாகும்.

நிற்பனவாகிய மூர்த்திகளை நின்ற ரூபமாகவும், இருப்பனவாகிய மூர்த்திகளை அந்த ரூபமாகவும் சயன மூர்த்தியை அந்த ஆகிருதியாகவும் அலங்கரித்து வணங்கவேண்டும். மாறிச் செய்தல் தோஷம்.

மூர்த்தியின் திருமேனியில் கட்டுதல், மரக்கட்டை லோகம் முதலியவற்றுல் செய்யப்பட்ட கால் கைகளை வைத்துக் கபடமாக அலங்கரித்தல் லீலாபேதமான ஓர் விக்ரஹத்தைப் பிறிதொரு லீலாமூர்த்தியாக அலங்கரித்தல், சிவதேஹத்தில் விஷ்ணு ரூபத்தைக் கற்பித்தல், சந்திரசேகரத் திருமேனியில் நிருத்த ரூபத்தையும், கல்யாண சுந்தரரிடம் நிருத்த ரூபத்தையும் அலங்கரித்தல் முதலிய விபரீத அலங்காரங்கள் செய்யப்படின் விபரீத பலனுண்டாம், மற்றும் சாந்தமூர்த்தியை உக்ரமாக அலங்கரித்தலும் குற்றமாகும். இதனுல், பிரபுக்கள் அரசர், யஜமானர்கள் அங்கஹீனமாவார்கள். அந்த தோஷம் நீங்கும் பொருட்டு பிராயச்சித்தம் செய்யவேண்டும்.

— வீராகமம்.

शिवं शक्त्याकृतिं कल्प्य शक्तिं शिवाकृतिं तथा ।
कल्पिते विपरीतेतु नृपस्यापजयं भवेत् ॥

— वचनरत्नावलि

சிவ மூர்த்தியை சக்தியாகிருதியாகச் செய்வது சக்தியை சிவாகிருதியாகச் செய்வது முதலிய விபரீதச் செய்கையால் அரசனுக்கு அபஜயமுண்டாகும். (தொடரும்)

# "இயற்கையில் இறைமை"*

புலவர், திரு. இரா. செல்வக்கணபதி

இறைவனெனும் பெருங்கவிஞன் வடித்துத் தந்த
எழிலொழுகும் ஓவியமே இயற்கை என்பேன்!
விண்படைத்தான்; மண்படைத்தான்; வியப்பை ஆக்கும்
வேகத்தில் காற்றமைத்தான்; தீயைச் சேர்த்தான்
தண்ணென்ற நீர்படைத்தான்; ஆகாயத்தே
தகதகென ஒளிபரப்பச் சுடர்படைத்தான்;
எண்ணற்ற விண்மீன்கள் கோடி கோடி
எடுத்தெறிந்தான் வானத்தில் முல்லை போலே!
படைத்தானைப் படைப்புக்குள் காணல் வேண்டும்
பாவலர்கள் வாழ்வெல்லாம் கவிக்குள் அன்றோ?
சிந்தனைக்கும் செயலுக்கும் நெருங்கி வாராச்
செம்மைமிகு பரம்பொருளின் இயல்பை எல்லாம்
வந்தித்து வழிபடுதல் வேண்டும் என்றால்
வானியற்கைப் பொருள்களையே நாடல் வேண்டும்!
ஆண்டவனைக் கண்முன்னே காட்டு கென்றே
ஆர்ப்பரிக்கும் கூட்டத்துக் கொன்று சொல்வேன்!
கண்ணுக்கு வாராத கருத்தை எல்லாம்
கற்பனையென் றொதுக்கிவிடத் துடித்தீ ராயின்
முன்னோர்கள் இன்றில்லை என்ப தாலே
முப்பாட்டன் எனக்கில்லை என்பீர் போலும்!
தீயிருப்பைப் புகைகண்டு தெளிய வல்ல
திறத்திற்கே அறிவென்ற சிறப்புச் சாரும்!
வரையறுத்த இயல்போடே இயற்கை என்னும்
வரலாறு காட்டுகின்ற உண்மை கண்டும்
இறையுண்மை தேறீர்கள் என்றால் உங்கள்
எண்ணத்தை ஐயுறுவேன்! வேறென் செய்ய!

---

*11—4—1973இல் சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் திருமுலைப்பால் விழாவின் அங்கமாக நடைபெற்ற கவியரங்கத்தில் பாடிய கவிதையின் ஒருபகுதி.

சட்டிக்குள் யானைவந்து புகுவ தில்லை !
சரிப்படுத்தி நாய்வாலை நிமிர்ப்ப தில்லை !
உய்த்துணர்ந்தே அறிகின்ற ஆற்றல் இன்றேல்
ஒருபொருளும் புரியாது; தெளிவே இல்லை !
கீழ்வானத் தெழுந்தொளிர்ந்து கதிர்கள் கொட்டிக்
கிறுகிறுக்க மேலேறி உலகை வாழ்த்தி
ஆழ்கடலில் மாலையிலே குளித்தெ ழுந்தே
அதிகாலை மீண்டுவரும் கதிரா கட்டும் !
மலைபிறந்து கட்டுக்குள் அடக்கம் கொண்டு
மாண்பொருள்கள் உடனள்ளிப் பள்ளுப் பாடி
இலையடர்ந்த சோலைகளுக் கினிமை ஈந்து
எறிகடலில் இணைகின்ற நதியா கட்டும் !
எங்கெங்கும் நிறைந்திருந்தும் உயிர்கள் எல்லாம்
இனிதாக வாழ்வதற்குத் தன்னை ஈந்தும்
பொங்குமெழில் திருமேனி காட்டா திந்துப்
புத்துலகை வாழ்விக்கும் காற்ரு கட்டும் !
போட்டவிதைப் பண்புகளைப் புரிந்து கொண்டு
புதிதொன்று செய்யாது தான் இணைந்து
காட்டுமெழில் முளைதோன்றக் காலந் தோறும்
கடிதான பணிசெய்யும் மண்ணு கட்டும் !
நியதிக்குட் பட்டிவைகள் எல்லாம் என்றும்
நிற்பதற்குக் காரணத்தை அறிந்தீ ராயின்
ஆண்டவனின் இருப்புக்குச் சான்றைத் தேடி
அலைகின்ற வீண்முயற்சி வேண்டா தாகும் !
மண்ணுலே இயன்றதொரு பானை கண்டீர்
மண்என்றே காணுங்கால் பானை இல்லை !
பானைஎனப் பார்த்தீரேல் மண்ம றைந்து
பானைக்குள் ஒன்றிவிடும் பரமும் ஈதே !
பார்க்கின்ற மலரெல்லாம் நீயே என்ற
பண்பார்ந்த நெஞ்சுக்குள் இறைமை தங்கும் !
நீலவான் பேரழகைக் காணும் போது
நினைவெல்லாம் உமையாளுல் இறைமை சேறும் !
பச்சைப்புல் தரைகாணும் நேரத் தெல்லாம்
பரந்தாமன் நினைவாயின் இறைமைக் காட்சி !
மலைகாணும் போதெல்லாம் கயிலை நாதன்
மாத்தோற்றம் காண்பீரேல் இயற்கை வாழ்த்தும் !

# கருவூர்த் தேவரின் கவிதை நலம்

டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ , பிஎச். டி.

## இராசராசரும் கருவூர்த் தேவரும் :

இராசராசப் பெருமன்னர் காலத்து வாழ்ந்தவராகக் கருதப் பெறும் கருவூர்த்தேவர் சிறந்த அருட் சித்தராக விளங்கியதுடன் செந்தமிழ்க் கவிஞராகவும் விளங்கினர். இனிய தமிழில் பக்தி நலம் கனிந்த பல்வேறு பாடல்களைப் பாடினர். பெருவுடையாரை இராசராசர் பிரதிட்டை செய்தபோது சிவலிங்கப் பெருமான் ஆவுடையாரோடு பொருந்தி நில்லாதது கண்டு அன்பர் பலர் வேண்டுகோளின்படி தம் வாய்த்தம்பலத்தை இவர் உமிழ்ந்தவர் என்றும், பின் மருந்து இறுகிற்று என்றும் ஒரு வரலாறு உண்டு; அது இவருடைய திருவருள் ஆற்றலை விளக்குவதாகும். கங்கை கொண்டசோழேச்சுரத்தையும் இவர் பாடியிருத்தலால் முதலாம் இராசேந்திரர் காலம்வரை இவர் வாழ்வு தொடர்ந்தது என்று கருதலாம்.

## திருவிசைப்பாத் தொகுப்பு

கருவூர்த் தேவரின் கவிதைகளைச் சைவத் திருமுறைகளுள் ஒன்பதாம் திருமுறையில், மூன்ருவது தொகுப்பாகச் சேர்த்துள் ளனர். இவை புறநீர்மைப் பண்ணில், 'கோயில்', ' திருக்களந்தை யாதித்தேச்சரம்' ஆகிய இருதலங்களைப் பற்றியும், பஞ்சமப் பண்ணில், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம்' 'திருமுகத்தலை' ' கங்கை கொண்டசோழேச்சரம்,' ' திருப்பூவணம்' ' திருச்சாட் டியக்குடி' 'தஞ்சையிராசராசேச்சரம்' திருவிடைமருதூர் பற்றி யும், காந்தாரப் பண்ணில் ' திரைலோக்கிய சுந்தரம்" பற்றியும் பாடியுள்ள பாடல்களாகும். ஐந்து பதிகங்கள் பதினெருபாடல் களைக் கொண்டனவாகவும், ஐந்து பதிகங்கள் பத்துப்பாடல் களைக் கொண்டனவாகவும் அமைந்துள்ளன.

## திருக்கடைக் காப்புத்திறன்

கருவூர்த்தேவர் தம்முடைய பதிகங்களை இவ்வாறு இரண்டு அமைப்பில், பத்துக்கொண்டனவும், பதினென்று கொண்டனவு மாக அமைத்துக் கொண்டதன் காரணம் தெளிவாகவில்லை. தம்

முடைய பத்துப் பதிகங்களிலும் இறுதிப் பாட்டுக்களில் தம் முடைய பெயரை அமைத்துப் பாடுதல் இவருடைய இயல்பாக உள்ளது.

'கருவூர்த் துறைவளர் தீந்தமிழ்மாலை' (90)

'கலைபயில் கருவூர் ஆரணம் மொழிந்த
பவளவாய் சுரந்தமுதமூறிய தமிழ்மாலை' (100)

'பித்தனேன் மொழிந்த மணிநெடுமாலை' (111)

'ஆலையம் பாகினனைய சொற் கருவூர்
அமுதுறழ் தீந்தமிழ் மாலை' (121)

'நிலைபெற்ற கருவூரன் தமிழ்மாலை' (132)

'அங்கையோடேந்திப் பலிதிரிகருவூர்
அறைந்த சொல்மாலை' (143)

'செழுமறை தெரியும் திகழ்கருவூரனேன்
உரைத்த பாவணத் தமிழ்கள்பத்தும்' (151)

'காட்டிய பொருட்கலை பயில் கருவூரன்
கழறுசொல் மாலை' (161)

'அருமருந்து அருந்தி யல்லல்தீர்கருவூர்
அறைந்த சொல்மாலை' (172)

'கருவூர் தருங் கரும்பனைய தீந்தமிழ்மாலை'. (182)

பெரும்பாலான இடங்களில் தம்மைக் 'கருவூரர்' என்றே இந்நல்லாசிரியர் குறித்துள்ளார். இத்திருக்கடைக்காப்புச் செய்யுட்களை வேறு யாராவது செய்திருப்பார்கள் என்று கருதவும் இடமில்லை; 'பித்தனேன்' (111) 'கருவூரனேன்' (151) ஆகிய இரண்டு சொற்கள், சித்தர் தாமே இவற்றை இயற்றியிருத்தல் வேண்டும் என்று அறிதற்குத் தக்க சான்றுகளாக உள்ளன.

அருட்சித்தர் அநுபவம் :

"கலைகள்தம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத் தெனக்கே
முலைகள்தந் தருளும் தாயினும் நல்ல
முக்கணன்" (91)

" பாவியேன் செய்யும் பிழையெலாம்
பொறுத்தென் பிணி பொறுத்தருளாப்
பிச்சரே " (94)

என்பன முதலிய பாடல்கள் நெஞ்சை உருக்குவன.

" கன்னகா உள்ளக் கள்வனேன் நின்கட்
கசிவிலேன் ; கண்ணினீர் சொரியேன் ;
முன்னகா வொழியே ஞயினும் செழுநீர்
முகத்தலையகத் தமர்ந்து றையும்
பன்னகா பரணு பவளவாய் மணியே
பாவியேன் ஆவியுள் புகுந்தது
என்ன காரணம்நீ ஏழை நாயடியேற்கு
எளிமையோ பெருமை யாவதுவே " (114)

" என்னையுன் பாதபங்கயம் பணிவித்து
என்பெலாம் உருகநீ எளிவந்து
உன்னை யென்பால் வைத்து எங்கும் எஞ்ஞான்றும்
ஒழிவற நிறைந்த வொண் சுடரே " (119)

போன்ற பாடல்கள், இறைவனுடைய சீரிய அநுபவம் பெற்ற அருட்சித்தர் இவர் என்பதனை இனிது உணர்த்துகின்றன.

காதல் நெறி :

அகப்பொருள் நெறியிற் பாடப்பெறும் பாடல்கள் உள்ளத்தை நெகிழ்விக்கும் ஒட்பம் உடையவையாய் ஒளிர்கின்றன எடுத்துக்காட்டாகத் திரைலோக்கிய சுந்தரப் பதிகப் பாட்டுக்களைக் குறிக்கலாம்.

" நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக் கியசுந்தரனே "

இப்பதிகப் பாட்டுக்கள் காதலுற்ற மடந்தை கருத்தழிந்த நிலையை உருக்கமுடன் எடுத்து ஓதுவனவாய் உள்ளன. 'கண்ணார அருவி சொரிதல்' என்று கண்ணீரை உருவகப் படுத்தும் அழகு உள்ங்கொளற் குரியது. தெருவில் உலாப் போந்த அழகை - நையாத உள்ளத்தை நையவைப்பதற்காக மேற்கொண்ட திருவருட்குறிப்புடையதாகக் கருவூர்த்தேவர் உரைத்தல் நெஞ்சு நெகிழ்விக்கும் திறம் உடையதாகும்.

### தஞ்சைப் பெருவுடையார்

இராசராசப் பெருமன்னர் கட்டிய தஞ்சை இராசராசேச்சரத்து இறைவரை உளமாரத் தொழுது 'சொன்மாலை' தொடுக்கின்றார் தேவர், இராசராசேச்சரம் உடையாருடைய அருள் திருமேனியை வியந்து போற்றுகின்றார்- சூரியன் ஒன்றல்ல, ஒருகோடி நூறுயிரம் ஒளிபரப்புவது போன்ற ஒளியான திருமேனி " என்று கூறி அநுபவிக்கின்றார்.

" உலகெலாந் தொழவந் தெழுகதிர்ப்பருதி
ஒன்று நூறுயிரகோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்பு அச்சோ!
அங்ஙனே அழகிதோ ? " (162)

இந்த இறைவரே எனக்கு உறவு ; வேறு யாரும் இல்லை (163) என்று கூறி மகிழ்கின்றார்.

எவ்வளவோ காலம் பணிசெய்து வாடுவோர் பலர் இருக்க, எனக்கு வந்து அருள் செய்த அந்த எளிமைக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன் ; மறவாமை ஒன்றே செய்யலாவது (164) என்று கூறி நெகிழ்கின்றார்.

" பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை என்றுநான் மறக்கேன் " (169)

தஞ்சைத் திருக்கோயிலைச் சூழ்ந்த மதில் அமைப்பழகை, " இஞ்சி சூழ் தஞ்சை இராசராசேச்சரம் " என்று பாடல்தோறும் கூறியுள்ளார் ; நாடகசாலையில் இளம்பெண்கள் அழகிய நடமிடுதலை (169) எடுத்தேத்தியுள்ளார்.

### இராசேந்திரன் காலத்தும் :

கங்கைகொண்ட சோழேச்சரத்திற்கும் சென்று பெருமானைப் பரவியுள்ளார்.

" அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னை யாள் விரும்பி யென்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன் " (133)

என்று பாடுவது, தஞ்சைப் பாடற்பகுதியை ஒட்டி வருவது கருதத்தக்கது.

'அன்பொடு தன்னை அஞ்செழுத்தால் போற்றி உள்ளம் உருகும் தொண்டர்களுக்கு எல்லாப்பேறும் தருவதனுல் அற்புதத் தெய்வம் இதனின் மற்று உண்டோ?' (135) என்று வினவுகின்ருர். பிறிதோரிடத்தில், நினைப்பார் நினைந்த வடிவோடு அவர் நெஞ்சத்து விரைந்து ஏகும் இயல்புடையவன் இறைவன் என்பதனை, 'கருதுவார் கருதும் உருவமாம்' (137) என்ற திட்பநுட்பம் சான்ற தொடரிற் புலப்படுத்தியுள்ளார்.

கங்கைகொண்ட சோழேச்சரத்தில், கருவூர்த்தேவர், இறைவனின் திருக்கரம் தம் தலைமீது பட்டு வாழ்த்தப் பெற்ருர் என்று கொள்வதற்கு அகச்சான்ருய் நிற்பது, "பூங் கைத்தலம் சென்னிமேல் வைத்த கங்கைகொண்ட சோழேச்சரத்தானே" (140) என்ற தொடர். இதனுல் திருவதிகையில் அப்பரடிகளார் பெற்றதுபோன்று கங்கைகொண்ட சோழபுரத்தில் கருவூர்த் தேவர் ஒருவகை ஞானதீட்சை பெற்ருர் என்று கருதலாம்.

(தொடரும்.)

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

### தருமையாதீனம்

### ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம், திருக்கடவூர்,

காலனை மார்க்கண்டற்காகக் காய்ந்து, ஞாலம் தன்புகழே மிகவாக்கிய மூர்த்தியையும், விழிக்குத் துணையாம் அன்னை அபிராமியையும் வணங்கும்பேறு இன்று பெற்றேன். ஆலயப் பணியாளர் அனைவரும் அத்தனையும், அம்மையையும் கண்டு வணங்க அன்புடன் ஆவன செய்தனர். அருள்பணியிலும், அன்புப்பணியிலும் ஈடுபட்டிருக்கும் அவர்கட்கெல்லாம் என் நன்றியும் வணக்கமும். உள்ளம் உருக, ஊனுருகப் பாடினர் ஓதுவாமூர்த்தி. அவருக்கு என் பாராட்டுக்கள். இந்தத் திருக்கோயிலைக் கவினுறக் காத்து அருளாட்சி செய்துவரும் தருமையாதீனக் குருமணி 26ம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகளின் திருவடிகட்கு என் சிரம்தாழ்ந்த வணக்கம்.

தருமையாதீனத்தின் முத்திரை இத்திருக்கோயிலில் முழுதும் மிளிர்கின்றது.

(ஒ-ம்.) ம. சு. முருகேசன்,<br>
1—4—73. டிப்டி கமிஷனர், H. R. & C. E.<br>
மதுரை.

# திருவருட்பயன் விளக்க உரை

தருமையாதீனப் புலவர், மகாவித்துவான்,
திரு. சி. அருணைவடிவேல் முதலியார்.

( மலர் 32. இதழ் 6. பக்கம் 286 - இன் தொடர்ச்சி )

நான்காவது குறள்,

"விரியமந மேவியவ்வை மீளவிடா; சித்தம்
பெரியவினை தீரிற் பெறும்"

எனவரும்.

இதன் பொருள்: ம ந - முன்னர் ஆணவ மலமும், பின்னர் அது காரணமாக, 'திரோதாயி, மாயை, கன்மம்' என்பனவும்; விரியமேவி - அழுத்தம் மிகப் பற்றி நின்று; யவ்வை மீள விடா - உயிர்களைத் தம்மினின்றும் மீண்டு போக விடமாட்டா; தம் பெரிய வினை தீரின் - உயிர்களின் மிக்க வினை கெடுமாயின்; சி பெறும் - அவை ஏனையவற்றினின்றும் மீண்டு சிவத்தை அடையும்.

விளக்க உரை :- மேல், "ஊன நடனம்" எனக் குறிக்கப் பட்ட பாசம் மாயைகளைத் திருவைந்தெழுத்தில் ஈற்றினின்றும் எதிர் நிரல் நிறையாகக் கொள்க என்றற்கு, "ம ந" என்றார். எனவே, "ஞான நடம்" எனப்பட்ட இறையையும், சத்தியை யும் திருவைந்தெழுத்தில் முதற்கண் நின்று, முறை நிரல் நிறை யாகவே கொள்ளுதல் அமைந்து கிடந்தது. இங்ஙனமாகவே, 'சி, வா, ய, ந, ம' என்பவற்றின் பொருள் முறையே இறை, சத்தி, ஆவி, மாயை, பாசம் ஆதல் முடிந்தது. இதனை,

"ஈசன் அருள் ஆவி எழிலார் திரோதம்மலம்
ஆசிலெழுத் தஞ்சின் அடைவாம்"

எனவும்,

"சிவன்அருள் ஆவி திரோதம்மலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம்"

எனவும் போந்த 'உண்மை விளக்கத்தால்' தெளிய உணர்க. இங்ஙனம் உணர்த்தப்பட்ட பொருளைப் பல்காலும் பயின்றறிதற்

பொருட்டு அப்பொருள்களை அவ்வெழுத்தாகவே கூறினர். பின்னரும் அவ்வாறு கூறுதல் அறிக.

மூல மலமாகிய ஆணவ மலமே எல்லாத் தீங்கிற்கும் அடிநிலைக் காரணம் ஆதலின், அது பரிபாகம் எய்தியவழியே ஏனையவும் நீங்குமாயினும், அப்பரிபாகத்தின் பயன், வினை நீக்கமாய் முடிதல்பற்றி "வினை திரின்" என்றும், ஈண்டு, 'வினை' எனப்படுவது சஞ்சித கன்மம் என்பார், "பெரியவினை" என்றும்கூறினர். ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்தம் என்னும் மூவகை வினைகளுள் சஞ்சிதமே பல பிறப்புக்களிலும் ஈட்டப்பட்டு ஈண்டிக் கிடப்பதாதல் அறிக. இச்சஞ்சித கன்மம், ஆசான் மூர்த்தி வழியாக, 'தீக்கை' எனப்பெயர் பெற்று நிகழும் சிவனது கிரியா சத்தியின் தொழிற்பாட்டினால் நீங்கும் என அறிக.

இதனால், ஊன நடனத்தினால் விளைவது கூறி, ஞான நடனத்தின் இயல் புணர்த்தற்குத் தோற்றுவாய் செய்யப்பட்டது.

ஐந்தாவது குறள்,

"மாலார் திரோதம் மலம்முதலா மாறுமோ
மேலாசி மீளா விடின்"

எனவரும்.

இதன் பொருள் :- மால் ஆர் திரோதம் மலம் முதல் ஆ-மயக்கம் நிறைந்த திரோதாயியைக் குறிக்கின்ற நகாரமும், ஆணவ மலத்தைக் குறிக்கின்ற மகாரமுமே முதலாய் நிற்ப; சி மேலா மீளா விடின் - சிவத்தைக் குறிக்கின்ற சிகாரம் முதலாமாறு திருவைந்தெழுத்து முறைமை மாறுமலே நிற்குமாயின்; மாறுமோ- மலம் முதலிய பாசங்கள் நீங்குமோ ! நீங்கா.

விளக்க உரை :- 'ஆதலின், அவை நீங்க வேண்டுவோர் திருவைந்தெழுத்தைச் சிகாரம் முதலாகவைத்தே ஓதுக' என்பது குறிப்பெச்சம். முன் நிற்பது தலைமைப் பொருளும், பின் நிற்பது அடிமைப் பொருளும் ஆதலின், பாசங்கள் முன்நிற்ப, உயிர் அவற்றின் பின் நிற்குமாயின், உயிர் பாசத்தின் வழி உழல்வதல்லது மீட்சியின்றும். ஆகவே, சிவமும், அருளும் முன் நிற்ப, உயிர் அவற்றின் பின் நிற்குமாயின், அவற்றின் வழிப் பட்டுப் பாசம் நீங்கப்பெறும் என்பது இதனுள் விளங்குதல் காண்க.

" நம்முதலா ஓதில்அருள் நாடாது; நாடும், அருள்
சிம்முதலா ஓதுநீ சென்று "

என்றும்,

" ஆதி மலம்இரண்டும் ஆதியா ஓதிஞல்,
சேதியா மும்மலமும் தீர்வாகா !'

என்றும் 'உண்மை விளக்கத்துள்ளும்' கூறப்பட்டது.

நகாரம் முதலாக உள்ளதை, 'தூல பஞ்சாக்கரம்' என்றும், சிகாரம் முதலாக உள்ளதை, 'சூக்கும பஞ்சாக்கரம்' என்றும் கூறுவர். தூலமாகக் கூறியவழிப் பஞ்சாக்கர மந்திரம் தன்னையே சுட்டலும், தன் பொருளைச் சுட்டலும் என இரு நிலைமையும் உடைத்தாய் நிற்கும் எனவும், சூக்குமமாகக் கூறியவழி அம் மந்திரம் தன் பொருளையே சுட்டும் ஒரு நிலைமையே உடைய தாம் எனவும் உணர்க. பாசங்களை அறுத்துச் சிவத்தை அடை விப்பனவாகிய நால்வர் திருமுறைகளுள் தூல பஞ்சாக்கரம் தன்னைச் சுட்டும் வகையிலே ஓதப்பட்டும், அதன் பொருளைச் சுட்டுமிடத்துச் சூக்குமமாகவே ஓதப்பட்டும் வழங்கும். சொல்லைச் சுட்டுமிடம் பலவும், பொருளைச் சுட்டுமிடம் சிலவும் ஆதலின், அம்முறையும் அவ்வாறே அமைந்தன. "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்றவாறு, பஞ்சாக்கரத்தை ஓதப்பெறும் முதற்பேறே, சமய தீக்கைப் பேறுதலின், அதன்கண் கேட்பிக்கப் படுவது தூல பஞ்சாக்கரமே யாயிற்று. இதனுள், 'மேலாசி' என்பதில் ஒற்று மிகாமை, சிகாரம் வடவெழுத்தாதல் பற்றியாம்.

இதனல், 'ஊன நடனத்தின் வழிநில்லாது ஞான நடனத் தின்வழி நிற்க' என்பது கூறப்பட்டது.

ஆருவது குறள்,

" ஆராதி ஆதாரம்; அந்தோ ! அது மீண்டு
பாராது மேலோதும் பற்று "

எனவரும்.

இதன் பொருள் :- ஆதாரம் ஆராதி - (விசேட தீக்கையால் திருவைந்தெழுத்தின் பொருளை உணர்ந்த மாணவகனே,) நீ எப்பொருட்கும் ஆதாரமாகிய சிவத்தை வழிபடு; (சிகாரம் முதலாகவே திருவைந்தெழுத்தை ஓது.) அது மீண்டு பாராது மேல் ஓதும் பற்று அந்தோ - அவ்வாறு சிவம் (சிகாரம்) முதலாக ஓதுமாற்றை நோக்காமல், பின்னும் பின்னும் முன்போலவே நகாரம் முதலாக ஓதுதற்குக் காரணமான உலகப் பற்று, ஐயோ ! இரங்கத் தக்கது.

விளக்க உரை :- பின் நிற்றலே வழிபாடாதலின், அதனை வழிபடுதலாகவே கூறினர். "மீண்டு" என்றதனை 'மீள' எனத் திரிக்க. 'இரங்கத் தக்கது' என்பது சொல்லெச்சம். இதனல், நகாரம் முதலாக ஓதுவார்க்கு உலகப் பயன் கிடைத்தலும், அப் பயனில் பற்று நீங்காதவர் சிகாரம் முதலாக ஓத முயலாமையும் பெறப்பட்டன. "மேல் ஓதும் பற்று" என்றமையால், விசேட தீக்கை பெற்றுக் கிரியையிலும், யோகத்திலும் நிற்போர் நிட்காமிய பூசையும், சிவயோகமும் செய்யாவழிப் பயனில்லையாதல் பெறப்படும்.

இதனல், ஊன நடனத்தின்வழி நிற்றல் பிறவி நீங்குதற்கு வாயிலாகாமை கூறப்பட்டது. இவ் விருகுறளிலும் எழுத்துக்கள் அவற்றின் பொருளாகவே கூறப்பட்டன.

ஏழாவது குறள்,

"சிவமுதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவம்;இதுநீ ஓதும் படி"

எனவரும்.

இதன் பொருள் :- சிவ (ஏ) முதல் ஆமாறு சேருமேல் - திருவைந்தெழுத்தில் 'சி, வ' என்னும் இரண்டெழுத்துக்களே முன் நிற்கும் முறை கூடுமாயின் : பவம் தீரும் - பிறவி நீங்கும் ; (ஆதலால்,) நீ ஓதும் படி இது - (பிறவிக்கு அஞ்சுகின்ற) நீ ஓதத் தக்க முறை இதுவே.

விளக்க உரை :- இங்கு எழுத்துக்களை எழுத்தாகவே கூறினர். பிரிநிலை ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. 'இதுவே' என்னும் பிரிநிலை ஏகாரம் தொகுத்தலாயிற்று. 'பிறவிக்கு அஞ்சுகின்ற' என்பது இசையெச்சம்.

இதனல், 'ஞான நடனத்தின்வழி நிற்பின் பிறவி அறும்' என மேலைக் குறளால் உய்த்துணர நின்றது, பின்னும் வலியுறுத்தற் பொருட்டு எடுத்தோதி யாப்புறுக்கப்பட்டது.

எட்டாவது குறள்,

"வாசி யருளி யவ்வை வாழ்விக்கும் ; மற்றதுவே
ஆசி லுருவமுமா மங்கு"

எனவரும்.

இதன் பொருள் : வா சி அருளி யுவ்வை வாழ்விக்கும் - (திரு வைந் தெழுத்தைச் சிவ முதலாக ஓதினல்,) வகாரத்தால் குறிக் கப்படும் திருவருள் சிகாரத்தால் குறிக்கப்படும் சிவத்தை அடை வித்து, யகாரத்தால் குறிக்கப்படும் ஆன்மாவைச் சிவமாந் தன்மைப் பெருவாழ்வில் வாழச் செய்யும்; மற்று அதுவே அங்கு ஆசு இல் உருவமும் ஆம் - இன்னும் அந்த அருளே அம் முத்தி நிலைக்கண் ஆன்மாவிற்குக் குற்றம் அற்ற உடம்பாயும் நிற்கும்.

விளக்க உரை :- இங்கு எழுத்துக்களையும், பொருளையும் உடன் நிகழக் கூறினர். மற்று, வினைமாற்று. 'மற்றும்' என்னும் இறந்தது தழுவிய எச்ச உம்மை தொகுத்தலாயிற்று. "உடம்பு" என்றது, அவ்வாழ்வின் பயனை நுகர்தற்குத் துணையாதற் சிறப்பைக் கூறியவாறு. பெத்த நிலையில் உலகப் பயனை நுகர் தற்கு உலகப் பகுதியாகிய பூதம் முதலியவை கருவியாய் நின்று உடம்பெனப்படுதலால், முத்தி நிலையில் இறையின்பத்தை நுகர் தற்குத் துணையாய் நிற்கின்ற அருளையும் உயிருக்கு 'உடப்பு' என்பர். இவ்வாறன்றி இறைவனுக்குயாண்டும்அருளே திருமேனி யாய் நிற்றலை இங்குக் கூறுதற்கு யாதோர் இயைபும் இன்றென்க.

இதனல், 'சிவமுதலே யாமாறு சேரின் பவம் தீர்தல் இவ்வாறு' என்பது கூறப்பட்டது.

ஒன்பதாவது குறள்,

" ஆசின்நவா நாப்பண் அடையா தருளினல்
வாசியிடை நிற்கை வழக்கு "

எனவரும்.

இதன் பொருள் :- ஆசின் ந வா நாப்பண் அடையாது - குற்றம் உடைய திரோதானத்தைக் குறிப்பதாகிய நகாரத்திற்கும், பின் வகாரத்திற்கும் நடுவிடத்தை ஆன்ம எழுத்தாகிய யகாரம் அடை யாமல், வா சி இடை நிற்கை வழக்கு - திருவருளைக் குறிப்பதாகிய வகாரத்திற்கும், சிவத்தைக் குறிப்பதாகிய சிகாரத்திற்கும் நடு நிற்றலே முத்தி முறைமையாம்.

விளக்க உரை :- இது, திருவைந்தெழுத்தை ஓதும் முறையை யும், அம்முறைப்படியே அனுபவத்தில் நிற்கும் முறையையும் ஒருங்கு உணர்த்திற்று என்க. " ஆசின் " என்பது நகாரத் திற்கு அடை. திருவைந்தெழுத்தைச் சிகார முதலாக ஓதியவழி யகாரம் நகர வகரங்கட்கு இடை நிற்கும் ஆதலின், ' அம்முறை யும் முத்தி முறைமை அன்'றெென இக்குறளால் விலக்கி, ' வா சி

இடை நிற்க ஓதுதலே முத்தி பஞ்சாக்கரம்' என்பது உணர்த்தப்பட்டது. இதனை அதிசூக்கும பஞ்சாக்கரம் என்க. 'இம் முத்தி பஞ்சாக்கரம் உபதேச முறையால் உணரத்தக்கது' என்னும் கருத்தால், சிவஞான போத எட்டாஞ் சூத்திரத்து மூலத்தினும், உரையினும் 'விதிப்படி' எனக் குறிப்பாகவே கூறப்பட்டது. உண்மை விளக்கத்தினும் "விதிப்படியோ தஞ்செழுத்துமே" என்றே கூறப்பட்டது. அதனால், இது நிருவாண தீக்கைக்கண் குரு முகமாக அறியத்தக்கது என்க.

> "உடையாள் உன்றன் நடுவிருக்கும்;
> உடையாள் நடுவுள் நீ இருத்தி;
> அடியேன் நடுவுள் இருவீரும்
> இருப்பதானல்"

என்னும் திருவாசகப் பகுதியில் திருவைந்தெழுத்தை வைத்துக் காட்டும் முறையையும் அவரவர் தாம் தாம் அறிந்தவாறு வேறு வேருகக் கூறுவர்; உண்மை, உபதேசத்தால் உணரத்தக்கது.

இதனல், 'திருவைந்தெழுத்து பவம் தீர்தற்கு நேரே வாயிலாம் முறைமை இது' என்பது கூறப்பட்டது. எனவே, "மேல் சிவமுதலே யாமாறு சேருமேல் தீரும் பவம்" என்றது வழிமுறையால் வாயிலாதல் கூறியவாறுதல் அறிக.

பத்தாவது குறள்,

> "எல்லா வகையும் இயம்பும் இவன் அகன்று
> நில்லா வகையை நினைந்து"

எனவரும்.

இதன் பொருள் :- எல்லா வகையும் இயம்பும் - திருவைந்தெழுத்தின் முறைமையை ஒரு வகையாகக் கூருமல், இவ்வாறு பலவகையாக ஆகமங்கள் கூறுதல்; இவன் அகன்று நில்லா வகையை நினைந்து புருடன் பாசத்தினின்றும் உடனே நீங்கமாட்டாது, படிமுறையானே நீங்கும் இயல்புடையனுதல் கருதியாம்.

விளக்க உரை :- எனவே, 'அப் படிமுறையானே அதனைப் பெற்று ஓதிப் பயன் பெறல் வேண்டும்' என்பதாம். "அகன்று நில்லா வகையை நினைந்து" என்பதற்கு, 'திருவருளை விடாது பற்றி நிற்றல் வேண்டி' என உரைப்பர் நிரம்ப அழகிய தேசிகர்.

இதனல், திருவைந்தெழுத்தின் வகைபற்றி நிகழ்வதோர் ஐயம் அறுக்கப்பட்டது. (தொடரும்)

# "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 32. இதழ் 5. பக்கம் 245 இன் தொடர்ச்சி )

## 62. பாண்டியன் சுரந்தீர்த்தது

மதுரைப்பெருமான் மதிமுடிமேல் மண்சுமந்ததும் தேனமுத வாசகரை நற்கதியில் விடுத்த திறனும் கண்டோம். இனி கவுணியர் பெருந்தகையைக் கொண்டு சமணர் கூட்டுறவில் இருந்த வழுதியைச் சுரந்தணித்தாட்கொண்ட கொள்கை கூறுவாம்.

பாண்டியர் வமிசத்தில் சகநாதபாண்டியனுக்குப் பிறகு வீரவாகு, விக்ரமபாகு, பராக்கிரமபாகு சுரபிமாறன் போன்ற பலரும் இருந்து மறைந்த பிறகு கூன்பாண்டியன் அரசுக்கு வந்தான். தனது தோள்வலியால் சேரனையும் சோழனையும் வென்று புறங்கண்டு நிலமூன்றுங் காவல்புரிந்து வீரமகளைப் புயத்திருத்தி ஆண்டுவந்தான். சேரன் அளவிறந்த யானை, குதிரைகளையும், பொன், மணிகளையும் கொடுத்து இழந்த தன்னுட்டை மீளவும் பெற்றான். சோழன் தானீன்ற செல்வமகளாம் மங்கையர்க்கரசியாரைப் பாண்டியனுக்கு மணம் செய்து கொடுத்தான். அவளோடு நல்லறிவு படைத்த குலச்சிறையாரையும் பாண்டி நாட்டிற்கு அனுப்பிவைத்தான். நிதியமும் கலிங்கமும் விளை நிலங்களும்கணக்கின்றிக்கொடுத்துக் கூன்பாண்டியனிடமிருந்து தன்னுட்டைத் திரும்பப்பெற்றான். திருமால் திருமகளை மணந்து வருவதுபோல மாதர்குல மங்கையை மணந்து திரும்பினன் வழுதி. குலச்சிறையாரைத் தன் முதலமைச்சராக ஆக்கினன்.

மேனியில் கூன் கொண்டதுபோல நல்வினையறியா சமணர் வலைப்பட்டுத் தென்னன் நான்மறை ஒழுக்கம் நீத்தான். மன்னனைப் பின்பற்றினர் மக்களும். பறித்ததலையும், பாசிப் பல்லும், பாயுடுக்கையும், அத்தி, நாத்தியென்றுரைக்கும் நாவும்கொண்ட

அமணர் கூட்டம் மூதேவி சூழ்ந்ததுபோல பாண்டிநாட்டைச் சூழ்ந்தது.

பாலருவாயரைப் பற்றியறிதல்:

அரசியும் அமைச்சரும் திருநீற்றைச் சந்தனத்தில் குழைத்துப் பூசுவது தவிர நேரே பூச வகையின்றி வருந்தினர். பொய்யுரை பிதற்றும் சமண் பாதகர்கள் என்று ஒழிவார்கள்; என்று பாண்டிய நாட்டில் சைவப்பயிர் விளையப்போகிறது, என்று ஏங்கிக் கூடல்நாயகனை வணங்கச் சென்றார்கள். 'நிலை தடுமாறிய முனிவர்களுக்குக் கலைநிறைந்த வேதத்தை அருளிய பெருமானே! வெவ்விய சமண் வலைப்பட்டுழலும் வேந்தனின் அறிவை சைவத்திற்குத் திரும்பி நின்பாதத்தில் அடிமைகொள்க' என்று அவர்கள் பணியும் நேரத்தில் அந்தணனொருவன் நெற்றியில் திருநீறும் கழுத்தில் கண்டிகையும் பூண்டுவந்தான். அவனது நாடு ஊர் பெயரை அமைச்சர் வினவ, தனது சோணாட்டையும் அங்கு நடந்துள்ள அற்புதத்தையும் அந்தணன் எடுத்துக் கூறினன்.

சிவபாதஇருதயரும் பகவதியம்மையும் பண்ணிய புண்ணியப் பயனால் பரசமயக் கோளரியொன்று அவதாரம் செய்ததையும் மூன்றுமாண்டில் உமையின் ஞானப்பாலுண்டு அக்குழவி செய்துள்ள அற்புதங்களையும் அந்தணர் சொல்லச் சொல்ல அரசியார் உடனே அந்த ஞானக்குழந்தை பாண்டிநாட்டிற்கும் வரவேண்டும் என்று ஆசைப்பட்டார். குலச்சிறையாரும்.

'வெங்குரு வேந்த ரடிபணிந் தடியேன் குலச்சிறை
விளம்பு விண்ணப்பம்
இங்கெழுந் தருளிச் சமணிரு ளொதுக்கி யெம்மிறை
மகற்குநீ றளித்துப்
பொங்கிரும் பணைசூழ் தென்தமிழ் நாட்டைப் பூதிசா
தனவழி நிறுத்தி
எங்களைக் காக்க'

என்றெழுதி அந்தணன் கைக்கொடுத்தார்.

அந்தணன் திருமறைக்காட்டில் அப்போது அப்பரோடு உடன் எழுந்தருளியிருந்த ஞானசம்பந்தரைப் பார்த்து அமைச்சரின் ஓலையைக் கொடுத்தான். உடன்புறப்பட ஆயத்தமான காழியர்கோனை அப்பர் தடுத்து, "சமணப் பாதகர்கள் எதற்கும் அஞ்சாதவர்கள். அவர்களோடு பலகாலம் பழகிய எனக்கே

கணக்கற்ற இடையூறுகள் செய்தனர். இப்போது நாளும் கோளும் நல்லநிலையில் இல்லை. ஆதலால் நீர் பாண்டிநாடு செல்லக்கூடாது" என்று கூறினர்.

### திருஞானசம்பந்தர் புறப்படல் :

ஞானசம்பந்தர் உறுதியாக இறைவன் திருவருளை நம்பிப் புறப்பட்டார். சிவனடியாரை அவனருளே காக்கும் என்று தலந்தோறும் இறைவனைப் பாடியபடி கன்னிநாடடைந்தார். முத்துப்பந்தரின்கீழ் முத்துச்சிவிகை ஊர்ந்து வரும் ஞானக் குழந்தையின் வருகையைத் திருச்சின்னங்கள் ஆரவாரத்தோடு தெரிவித்தன. 'சமணிருளோட்டும் சைவபானு வந்தது' என்று அவைகள் முழக்கின.

சம்பந்தரை எதிர்ப்பட்ட சமணர்கள் 'உங்கள் தெய்வத்தை வணங்கச் செல்வதற்கா இத்துணை ஆரவாரம்! வெற்றி முழக்கம்! நீர் யாரை வென்றீர்' என்று ஏளனமாகக் கேட்டார்கள். சம்பந்தர் மெதுவாக அவ்விடம் விட்டு நீங்கித் திருக்கோயில் வந்தார். இவர்களை வெல்லும், ஆற்றலை 'ஆலவாய்ப்பெருமானே தந்தருள்க' என்று மனமுருகி வேண்டினர்.

இறைவழிபாடு முடித்துத் திரும்புகையில் வாகீசமுனிவர் என்ற பெருந்தகை தனது திருமடத்தில் ஞானசம்பந்தர் வந்து தங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பிள்ளைப்பெருமானும் இணங்கினர். அன்றிரவு சமணர்கள் செய்யப்போகும் கொடுமையையும் தங்கள் மரபில் பெண்ணெடுத்துள்ள மாறன் படப்போகும் துன்பத்தையும் காணச் சகிக்காதவனாகிக் கதிரவன் கடலில் விழுந்தான். சமணரின் வஞ்சனைக்கு இடமளிக்க அவர்களோடு நட்புக்கொண்டு எங்கும் இருள் பரவியது. எங்குமெழுந்த நட்சத்திரங்கள், மயிர் பறிக்கப்பட்ட சமணர் தலைக் கொப்புளம்போல் இருந்தன.

### திருமடத்திற்குத் தீயிட்டனர் :

சமணர்கள் சண்பையர் கோனுக்குத் தீங்கிழைக்க அபிசார வேள்வி செய்தனர். அதில் வந்த அங்கியங்கடவுளை, நோக்கி 'பகைவனின் இருப்பிடத்தை அழித்து வருக'—என்று ஆணையிட்டனர். தக்கனின் யாகத்தில் கையிழந்த அக்னி ஏவலை மேற்கொள்ள அஞ்சினன். ஈன அமணர்கள் நெருப்பைக் கையிலேந்திச் சென்று ஞானசம்பந்தர் மடத்தில் தீ வைத்தனர்.

அடியார்கள் திருமடத்தில் நெருப்புப் பிடித்ததை சம்பந்தருக்குச் சொல்ல 'பொய்யுரை கொண்டு தொன்முறை மறந்த வேந்தனை இவ்வெப்பம் பையப் பற்றட்டும்' என்று ஆணையிட்டார்.

அப்படியே வேந்தனை வெப்புநோய்பற்றியது. படுத்தபாயும் உடுத்த கூறையும் மடுத்த சந்தனமும் கருக பாண்டியன் வெப்பு நோய் கண்டுபதை பதைத்தான். அரசியும் அமைச்சரும் கூடி மந்திரம் - மருந்து எல்லாம் தந்தும் தணியாமை கண்டனர். அரசன், செய்வது யாது என்று திகைக்க அன்றைய பொழுதும் புலர்ந்தது.

## அந்தணர் திலகம் அரண்மனை வந்தார் ;

சோழர்குல விளக்கை மணந்த மாறன் வருந்துவது கண்டு இருளெழினியை எடுத்து அங்கையால் அரசனை வருடுவான் போல் கதிரவன் தோன்றினன். சைவப் பயிருக்கு மேகமான ஞானசம்பந்தரால் தான் இந்நோய் தணியுமென்று அரசனிடம் அரசியும் அமைச்சரும் கூற, திருநீறிட்டவரை எப்படித் தன்னால் பார்க்கமுடியும்! என்று அரசன் வருந்தினன். நோயின் கடுமையைச் சுட்டி அவர்கள் சொன்னவுடன் அரசன் காழிப்பிள்ளையாரைக் காண இணக்கம் தெரிவித்தான்.

மங்கல வாத்தியங்கள் தோரணங்கள் தயங்கும் அரண்மனைக்குச் சம்பந்தர் வந்தார். ஞானக் குழந்தையின் நல்வடிவம் கண்டு மங்கையர்க்கரசி மனம் நிறைந்தார். தேவியின் நலம் உசாவினர் சம்பந்தர். அரசியார் கவுணியர்குலதீபத்தை நோக்கி 'வஞ்சனை நிறைந்த சமணர் தொலையவும், திருநீற்ரெளியில் கௌரியன் தேயம்விளங்கவும், வையை நாடனின் வெப்புநோய் தணியவும் அருள்க' என்று வேண்டினர். ஞானசம்பந்தரின் திருப்பார்வை பட்ட அளவிலேயே தன் நோய் தணிந்தமையுணர்ந்த மீனவன் 'பாவியேன் பிணி தணித்து - பணிகொள்ளும்' - என்று வேண்டினன். இதைக்கேட்ட சமணர்கள் நடுநடுங்கி எங்கள் திறமையைக் காட்ட ஒரு சந்தர்ப்பம் கொடுங்கள்; இடப்பக்கத்து நோயை நாங்கள் தணிப்போம் என்று கூறி அரசனிடம் அனுமதி பெற்று மயிற்பீலியால் தடவிக் குண்டிகை நீரை ஊற்றினர். முன்னிலும் இடப் பகுதியில் நோய் அதிகரிப்பது கண்டு துடித்தான் வேந்தன்.

ஞானசம்பந்தர் தன் பையிலுள்ள திருநீற்றை எடுக்கவும் சமணர்கள் அதனைப் பார்த்து, இது மாயநீறு என்று கூறிப் பூச விடாமல் தடுத்தனர். பிள்ளையார் உடனே திருவாலவாய்க்

கோயிலிலுள்ள மடைப்பள்ளிச் சாம்பலைக் கொணரச் சொல்லி திருநீற்றுப் பதிகம்பாடி - வழுதியின் உடலில் இட்டார். வலப் பாகம் சந்தனம் பூசியதுபோல் குளிர்ந்த பிறகும் இடப்பாகம் நெருப்பாய்ச் சுட்டமை - இருவினையும் ஒத்ததுபோல் இருந்தது. மீனவன் உண்மை உணர்ந்தான். 'பெருமானே' அடியேனைப் பற்றிய சமண்மாசொழிய இடப்பக்கத்து நோயையும் போக்கி யருள்க ' என்று வேண்டவும், பிள்ளையார் இறைவனை வேண்டித் திருநீறுபூசி சுரத்தினைத் தணிவித்தார்.

மீனவனின் சுரம்மட்டுமல்ல ஞானசம்பந்தரின் கைபட்டு அவனுடைய கூனும் நீங்கியது. அன்று தொட்டு சவுந்திர பாண்டியனாக மாறினன். சமண இருளகலப்பெற்று மாசற்ற மணியாய் விளங்கினன். (வளரும்)

---

## பார்வையாளர் குறிப்பு நகல்

தருமையாதீனம்

### ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

இறையுணர்வும், கலையழகும் செறிந்த கம்பகரேஸ்வரர் திருக் கோயிலைக் காணும் பேறு இன்று கிட்டியதற்காகத் திருவருளுக் குப் பெரிதும் நன்றியுடையேன். மேலை வானில் பரிதி மறையும் காலத்து இத்திருக் கோயிலில் வழிபடும்போது எனது உள்ளம் இறையின்பத்தில் திளைத்தது. ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும் சோதியை உள்ளம் உணர்ந்தது. மனித வாழ்வில், எத்துணைப் பிற நலன்கள் நிறைந்திருப்பினும், இறையுணர்வு இல்லையேல் அனைத்தும் பாழ்பட்டுவிடுகின்றன. எதனை அறிந் தால் அனைத்தையும் அறிந்ததாகுமோ, எதனை அறியாவிடில் பிற எல்லாவற்றையும் அறிந்திருப்பினும், அவ்வறிவு பயனற்று விடுமோ, அந்தப் பேரறிவை அடைய வழிகாட்டுகின்றன இத் தகைய திருக்கோயில்கள். "பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப் பென்னும் செம்பொருள் காண்பதறிவு" - அச்செம் பொருள் உணர்வை வளர்த்து வருவதற்காக இத்தகைய திருக் கோயில்களைச் சீரிய முறையில் நடாத்தி வருபவர்களுக்குத் தமிழகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. வளர்க இறையுணர்வு, வாழ்க நல்லோர்.

(ஒ-ம்.) தே. ப. சு. பழனிசாமி,
2—5—73. மாவட்ட குற்றவியல் நீதிபதி,
(District Magistrate)
குடந்தை.

# தேன் துளி

காட்டுவழியில் சென்றுகொண்டிருந்த அவன் களிறு ஒன்று துரத்திவருவதைக் கண்டு பயந்து பாழுங்கிணறு ஒன்றில் இறங்கினன். யானையும் அவனைநெருங்கி வந்துகொண்டிருந்தது. கிணற்றின் அடியில் கருநாகம் ஒன்று சீறிக்கொண்டு அவனைக் கடிக்கத்தாவுகிறது. இந்நிலையில் கிணற்றின் இடைப்பகுதியில் தனக்குப் பற்றுக்கோடாகக் கிடைத்த அறுகம்வேரைப் பற்றிக் கொண்டான்.

தான் பற்றியுள்ள வேர் உறுதியாக உள்ளதா? என்ற ஐயம் வந்தது அவனுக்கு. வேரின் அடிப்பகுதியை உற்றுநோக்கினன். எலி ஒன்று வேரைக்கடித்து அறுத்துக்கொண்டிருந்தது; எப்படியும் தப்பிக்கமுடியாதநிலையில் அலமரும் அவனுக்கும் ஓர் ஆசை. சற்று அப்பால் தேனடை ஒன்று முதிர்ந்து பிதிர்ந்து பிலிற்றும் நிலையில் இருந்தது. பெருமுயற்சி காரணமாக இரண்டு துளிகள் அவன் வாயிலும் விழுந்தன. மேலும் கீழுமாய் உள்ள துன்பக்கூறுகளைமறந்து அத்துளிகளைச்சுவைப் பதிலும் மேலும் பெறுவதிலும் ஈடுபட்டான் அவன். அவனது நிலையில்தான் உலகில் பலர் உள்ளனர்.

யானை - எமன். நாகம் - நரகம். அறுகம்வேர் - வாழ்நாள். எலி - வாழ்நாளை அறுக்கும் காலதேவன். தேன்துளி - உலகியல் இன்பம். இவ்வாறு உலகியல்இன்பத்தை உருவகித்து ஒரு தனிப் பாடல்.

“ அருகரி தொடர வீழஐந்தலை நாகங்காண
இடிகிணற் றருகின்வேரைப் பற்றிநான்றிட அவ்வேரைக்
கடுக ஓர் எலியும் வந்து கறித்திட அதில் நின்றேனுக்கு
இடைதுளி தேன் நக்கின்பம் போலும் இப் பிறவி இன்பம் ”

ஞானசம்பந்தர் இத்தகைய உருவகம் ஒன்றின்மூலம் உலகியலின்பத்தைத் தெளிவு செய்கிருர்:-

ஒரு பாம்பு தன்வாயில் தேரையைப் பற்றியுள்ளது. அத்தேரையின் வாயிலோ ஒரு வண்டு. அவ்வண்டு தேன்துளி பெறுவதில் ஆசைகொள்கிறது! அதுபோல நோயால் விழுங்கப் படுகிறது உடல். உடல் உயிரைக் கவ்வியிருக்கிறது; உயிர் உலகியல்இன்பங்களாகிய தேன்துளிகளைப் பெறுவதில்முனைந்து நிற்கிறது.

நோய், யாக்கை, உயிர் - இவை முறையே பாம்பு, தேரை - வண்டு இவற்றைக் குறிப்பன. தேன் - உலகியல் இன்பம். இவ் உலகியல் இன்பத் துன்பங்களிலிருந்து விலகி உண்மை யின்பத்தைப் பெறுதற்குரிய முயற்சியில் ஈடுபடுமாறு நெஞ்சிற் குரைப்பதுபோல நமக்கு அறிவுறுத்துகிறார் ஞானசம்பந்தர்.

செடிகொள் நோய்யாக்கை ஐம்பாம்பின்வாய்த் தேரைவாய்ச்
[ சிறுபறவை
கடிகொள் பூந்தேன் சுவைத்து இன்புறலாமென்று கருதினயே
முடிகளால் வானவர் முன்பணிந் தன்பராய் ஏத்தும்முக்கண்
அடிகளாரூர்தொழுதுஉய்யலாம் மையல்கொண்டஞ்சல் நெஞ்சே.

---

# சொல்லில் அடங்குவதோ ?

## ( வேலன் )

### எடுப்பு

சொல்லில் அடங்குவதோ - தமிழ்ச்
சொக்கலிங்கப் பெருமான் தூயபுகழ் என்றன் (சொ)

### தொடுப்பு

நல்ல தருமைநகர் நாயகன் குருமரபை
வல்ல விதங்காக்கும் வையக முதல்வன்சீர் (சொ)

### முடிப்பு

திருக்கயி லாயமெனும் திகழ்மர பினில்தோன்றிப்
பெருகும் தருமைத்தனிப் பெருமை தனக்குரியான்
நறுந்தமிழ்ச் சாத்திர நல்லுரை விரித்தடியார்
நல்லறி வினிலிருந்தே ஞானம் வழங்கிடுவான் (சொ)

சிவராத் திரிபூசை ஏற்பதுரைப் பேனே
திகழ்திரு வெம்பாவை வழிபா டுரைப்பேனே
தவறாத நாட்பூசைத் தன்மை யுரைப்பேனே
தருமைக் கருள்சொரியும் நன்மை யுரைப்பேனே (சொ)

கூடல்பொற் றாமரையில் கூடுந்திறம் சொலவோ
குருஞான சம்பந்தர்கைக் கோலந்தனைச் சொலவோ
வாடலிலா மவன் வழங்குந்திறம் சொலவோ
வாய்மை தனைச்சொலவோ தாய்மையருள் சொலவோ (சொ)

# செய்திகள்

தருமையாதீனத்தில்

## ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் பெருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் பெருவிழா 14-5-73 திங்கட்கிழமை முதல் தொடங்கி 23-5-73 புதன் கிழமை முடிய உள்ள நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. 14-5-73 அன்று துவஜாரோகணமும், 18-5-73 அன்று சகோபுர ரிஷபவாகனக் காட்சியும், 20-5-73 அன்று திருக்கல்யாண வைபவமும், புஷ்ப விமானம் வெள்ளிரதக்காட்சியும், 22-5-73 அன்று திருத்தேர்த் திருவீதியுலாவும் 23-5-73 அன்று பஞ்சமூர்த்திகள் ரிஷபவாகனுரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளலும் துவஜாவரோகணமும் நிகழ்ந்தன. விழா நாட்களில் காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றிஞர்கள். நாள்தோறும் அன்பர்கள் பலர் வழிபாட்டிற்கலந்து கொண்டு திருவருட் பிரசாதம் பெற்றுமகிழ்ந் தனர். திருவீதியுலாவில் சிறந்த நாதசுர இன்னிசை முதலியனவும், வேதசிவாகம பாராயணமும், தக்கபக்கவாத்தியங்களுடன் திருமுறைப் பண்ணிசைவாணர்களின் திருமுறைப் பாராயணமும் நடைபெற்றன.

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழா

தருமையாதீனத்தை நிறுவியருளிய ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஜீவசமாதி கூடியருளிய கோயிலே -ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இக்கோயிலில் நிகழும் பெருவிழாவின் பத்தாம் நாள் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைத் திருநாளாகும். மதுரைப்பொற்றுமரைக் குளத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருக்கரத்தில் கண்ணுக்கினிய பொருளாகப் பெட்டகக் கோயிலுடன் எழுந்தருளிய மூர்த்தியே, தருமையாதீனத்தில் ஆன்மார்த்த மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ சொக்கநாத பெருமான். ஸ்ரீ குருஞானசம்பந்தரின் குருபூஜைத்திருநாளாகிய 23-5-73 புதன் கிழமை யன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குச் சிறப்புவழிபாடு

நிகழ்த்தினார்கள். வழிபாடு காலை ஒன்பது மணி அளவில் தொடங்கியது. திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். திருவாவடுதுறை, குன்றக்குடி, மதுரை ஆதீனங்களிலிருந்து கட்டளைத்தம்பிரான் சுவாமிகளும் பிரதிநிதிகளும் வந்து வழிபாட்டில் கலந்துகொண்டார்கள். மற்றும் சென்னை உயர்மன்ற நீதிபதி மாண்புமிகு, திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்களும், வெளியூர் அன்பர்களும் மாயூரம் அன்பர்களும் மற்றும் பலரும் வந்து வழிபட்டனர். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் வழிபாட்டைச் சிறப்புற நிகழ்த்தி அன்பர்களுக்குத் திருவருட் பிரசாதம் வழங்கியருளினார்கள். நித்தியகன்மநெறி என்ற நூல் விழா மலராக வெளியிடப்பெற்றது.

23—5—73 அன்று குருபூஜைத்திருநாள் ஆதலின் ஸ்ரீகுரு ஞானசம்பந்தர் ஜீவசமாதி கூடியருளிய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில், ஸ்ரீ ஞானபுரீசுவரருக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப் பெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும் பஞ்சமுக அர்ச்சனையும் சிறப்பாக நடைபெற்றன. அபிஷேகத்தின் போது திருமுறைப்பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் வழிபாட்டிற்குப்பின்னர் அன்பர்களுக்குத் திருவருட் பிரசாதம் வழங்கியருளினார்கள்.

காலையில் மேலவீதியில் உள்ள மேலக்குருமூர்த்த தரிசனம் செய்து மாலையில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காவிரித் திருமஞ்சனத்திற்கும் குருமூர்த்த வழிபாட்டிற்கும் பெருமக்கள் பலர்சூழ நாதசுர இன்னிசை முதலியவற்றுடன் எழுந்தருளினார்கள். காவிரிக்கரையில் அமைந்துள்ள குருமூர்த்தங்களின் அற்புத வரலாறுகளை விளக்கச்செய்து வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கி மீண்டருளி ஸ்ரீ ஞானபுரீசுவரர், ஸ்ரீ தர்மபுரீசுவரர், ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயில் வழிபாடுகளை முடித்துக்கொண்டு திரு மடாலயத்திற்கு எழுந்தருளி ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்குப் பாவனாபிஷேகம் திருமெய்ஞ்ஞானம் நிவேதனம் ஆராதனைகள் செய்து வழிபாடு நிகழ்த்தியருளினார்கள். ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவன்று இரவில் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்கு நிகழ்த்தப்பெறும் இவ் வழிபாடு தனிச்சிறப்புடையது. வழிபாட்டிற்குப் பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் கொலுக்காட்சி வழங்கியருளினார்கள். அன்பர்கள் பலர் கொலு வழிபாடு செய்து, வணங்கி ஆசிபெற்று விபூதிப்பிரசாதமும் திருமெய்ஞ்ஞானப் பிரசாதமும் பெற்றுச் சென்றனர்.

## பட்டணப்பிரவேசம்

24—5—73 வியாழக்கிழமை பட்டணப்பிரவேசத் திருநாள். அன்றுகாலை ஒன்பது மணிமுதல் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்புவழிபாடு நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் வழிபட்டுப் பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர். நண்பகல் மாகேசுவர பூஜை ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பூஜைமடத்தில் சிறப்புற நிகழ்ந்தது. சிவபூஜைசெய்யும் அன்பர்கள் மாகேஸ்வரர்களாக இருந்தனர்.

இரவு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டணப் பிரவேசமாக சிவிகையில் சிறந்த மேளவாத்தியங்களின் இன்னிசையுடன் அன்பர்கள் புடைசூழ அருட்காட்சி வழங்கியருளினார்கள். வாணவேடிக்கைகள் நடைபெற்றன. அன்பர்களுக்கு மாலைகள் அணிவித்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாசி வழங்கினார்கள். நான்கு வீதிகளிலும் உள்ள வீடுகளில் பூர்ணகும்பங்கள் வைத்து வழிபட்டனர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டணப்பிரவேசமாக எழுந்தருளி அருட்காட்சி வழங்கியபின்னர் திருமடத்திற்கு எழுந்தருளி கொலுக்காட்சி வழங்கியருளினார்கள். அன்பர்கள் கொலுவழிபாடு செய்து பிரசாதம்பெற்று மகிழ்ந்தனர்.

## சமயப்பயிற்சி வகுப்பு

தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழாவை முன்னிட்டு 14—5—73 முதல் 24—5—73 முடிய உள்ள நாட்களில் சமயப் பயிற்சி வகுப்பு மிகச் சிறப்பாக நடைபெற்றது. பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், முதுநிலை ஆசிரியர்கள் மற்றும் சமய அன்பர்கள் பலரும் இவ்வகுப்பில் கலந்துகொண்டு பயனடைந்தனர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 14—5—73 காலை வகுப்புத் தொடக்கத்தின்போது ஆசி வழங்கியருளினார்கள். (ஆசியுரை இவ்விதழ் பக்கம் 324இல் வெளிவந்துள்ளது.) சென்னை உயர்மன்ற நீதிபதி மாண்புமிகு திரு. வி வி. இராகவன் பி. ஏ., பி எல்., அவர்கள்தொடக்கவுரையாற்றினார்கள்.

"திருவருட்பயன்" சிவஞானபோதம் என்ற இரண்டு நூல்கள் வகுப்பில் பாடமாக எடுத்துக்கொள்ளப்பெற்று மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் திரு. கு. சுந்தரமூர்த்தி எம் ஏ., ஆகியோரால் நடத்தப்பெற்றன. "வேதம்" என்பது பற்றி ஆனந்ததாண்டவபுரம் திரு. பி இராமதாச ஐயர் அவர்களும், ஆகமம் என்பதுபற்றி திரு. எஸ். சுவாமிநாதசிவா

சாரியார் அவர்களும், 'திருமந்திரம்' 'யோகக்கலை' என்ற தலைப்புக்களில் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்களும் 'பெரிய புராணம்' என்ற தலைப்பில் திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்களும் "சங்கநூல்" என்ற தலைப்பில் திரு. ந. ரா. முருகவேள் அவர்கள், திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் ஆகியோரும் "அறநூல்" என்ற தலைப்பில் திரு. ஔவை. து. நடராசன் அவர்கள், பாலகவி. திரு. வே. இராமநாதஞ் செட்டியார் அவர்கள் திரு. தெ. ஞானசுந்தரம் எம். ஏ., அவர்கள் ஆகியோரும் "திருமுறை" என்ற தலைப்பில் திரு. வை. இரத்தின சபாபதி அவர்களும், "இதிகாசங்கள்" என்ற தலைப்பில் திரு. சோ. சத்தியசீலன் அவர்களும், "சமய விரதங்கள்" என்ற தலைப்பில் திரு. வி. சா. குருசாமிதேசிகர் அவர்களும், "கலம் பகங்கள் என்ற தலைப்பில் திரு. இரா. செல்வக்கணபதி அவர்களும் வகுப்பை நிகழ்த்தினர்.

24—5—73 வியாழக்கிழமை மாலை சமயப்பயிற்சி வகுப்பு நிறைவு விழா நிகழ்ந்தது. சிதம்பரம் அறப்பணிச் செல்வர், டாக்டர். திரு. கே. அரங்கசாமிப்பிள்ளை M, B. B. S. அவர்கள் தொடக்கவுரை ஆற்றினார்கள். பொள்ளாச்சி தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் பி. எஸ். சி. எம்.ஐ. இ அவர்கள் சிறப்புரை வழங்கி சமயப் பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்கள். தருமையாதீனப் புலவர் மகா வித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் சமய பயிற்சி வகுப்பின் நிறைவுரையாற்றினார்கள். இறை வணக்கத்தோடு வகுப்பு நிறைவுற்றது.

## குத்தாலத்தில் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழா

"குத்தாலம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் வாரவழிபாட்டுக் கழகத்தினர் தருமையாதீன முதற்பெருங் குரவராகிய ஸ்ரீ குருஞான சம்பந்தர் குருபூஜைச் சிறப்பு வழிபாட்டினை 25—5—73 வெள்ளியன்று ஸ்ரீ உக்தவேதீஸ்வரப் பெருமான் ஆலயத்தில் நடத்தினர். வார வழிபாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு. சி. கோவிந்தராஜலு ஸ்ரீ குருஞானசம்பந்தரின் அருள் வரலாற்றையும், அவர்கள் அருளிய அருள் நூல்களையும், அவர்கள் ஜீவசமாதிகூடிய திருக்கோயிலை ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயமாக நித்திய நைமித்திய பூஜைகளோடு பிரம்மோற்சவம் நடைபெற்று வருவதனையும் பற்றக் குறிப்பிட்டார்கள். வழிபாட்டிற்குப்பின் அன்பர்களுக்கு மகாபிரசாதங்கள் வழங்கப்பட்டன."

# சென்னை, சமயப்பிரசார நிலையத்தில் ஆண்டுப் பிறப்பு விழா

சென்னை தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் 13-4-73 அன்று பிரமாதீச ஆண்டுப் பிறப்புவிழா பப்ளிக்சர்வீஸ் கமிஷன் தலைவர். திரு. ப. இரத்தினமுதலியார் B. A., B. L., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'ஆலயப்பணி சமயப்பணிகளில் இவ்வாதீனம் சிறந்தபணி ஆற்றிவருகிறது. சமயப்பிரசார நிலையத்தில் புத்தாண்டுப்பிறப்பு நன்னாளில் நாம் எல்லோரும் ஒருசேர இருந்து பஞ்சாங்கப்பயன் கேட்க வாய்ப்பு அருளி இருக்கிறார்கள்' என்று தமது தலைமை யுரையில் குறிப்பிட்டார்கள். அடுத்து திரு. S. V. சுப்பிரமணிய சாஸ்திரி அவர்களால் பஞ்சாங்கம் படிக்கப்பெற்றது. திரு. ப. வடிவேல்பிள்ளை அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவெய்தியது.

## கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா 7—4—73 அன்று, திருவேற்காடு, சுவாமி இராமதாசர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 'நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம். உடல்நோயை மருத்துவர்மூலம் போக்கலாம். ஆனால் ஊழ்வினையால் ஏற்படும் நோய்களை ஆண்டவனால்தான் போக்க முடியும். வேளூர் ஸ்ரீ வைத்தியநாதப்பெருமானும், ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமியும் தீராநோய்தீர்த்தருள வல்லவர்கள். சென்னையில் நடைபெறும் இவ்விழா மக்களை நல்வழிப்படுத்த உதவுகிறது. தருமையாதீனம் இத்தகு நல்லபணியைச் செய்து வருகிறது' என்று தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள். திரு. S. ஞானப்பிரகாசம், திரு N. இராமலிங்கம் ஆகியோர் வேளூர்த்தேவாரம், திருப்புகழ், நாமாவளிப் பிரார்த்தனைப் பாடல்களைப் பாடினர். வழிபாட்டிற்குப்பின்னர், சந்தனக்குழம்பு விபூதிப் பிரசாதங்கள் அன்பர்களுக்கு வழங்கப்பட்டன.

5-5-73அன்று கிருத்திகைப் பிரசாதம் வழங்கும்விழா. திருச்சி, புலவர், திரு. சு. அரங்கசாமி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. 'வேளூரில் கண்கண்ட தெய்வமாக விளங்குபவர் ஸ்ரீசெல்வமுத்துக்குமாரப்பெருமான்; அவருக்குக்கிருத்திகையில் அபிஷேகம் செய்யப்பட்ட சந்தனக்குழம்பு விபூதிப் பிரசாதம் சென்னை மக்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பினைத் தருமையாதீனம் ஏற்படுத்தித் தந்துள்ளது. இது சென்னை மக்கள் செய்தநற்பேறே யாகும்" என்று தலைவர் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள். வேளூர்த் தேவாரம் திருப்புகழ்ப் பாரா

யணத்திற்குப் பிறகு சந்தனக்குழம்பு விபூதிப் பிரசாதம் வழங்கப் பட்டது. ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை நன்றியுரை முதலியன கூறி கூட்டத்தைச் சிறப்புற நிகழ்த்தினார்கள்.

## மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு

சென்னை, தருமையாதீன சமயப் பிரசார நிலையத்தின் மாதாந்தர சமயப் பிரசார வழிபாடு, 29-4-73 அன்று சென்னை, G. T. தம்புசெட்டித் தெருவிலுள்ள ஸ்ரீ காளிகாம்பாள்கோவிலில் சிறப்பாக நடைபெற்றது. நிலைய அன்பர்கள் சார்பில் சுவாமி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப் பட்டன. திரு. N. இராமலிங்கம், திரு. மு. கு. புண்ணியகோடி ஆகியோரால் திருமுறை, அபிராமி அந்தாதி இவை பாராயணம் செய்யப்பெற்றன. வழிபாட்டிற்குப் பிறகு சமயப் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

திருச்சி, புலவர், திரு, சு. அரங்கசாமி அவர்கள் "திருவடிச் சிறப்பு" பற்றிப் பேசினார்கள். கோயில் அறங்காவலர், திரு. பண்டித நடேசனார் அவர்கள் எல்லோரையும் வரவேற்று, 'சென்னையில் உள்ள மிகப் பழமையான இந்தக் கோயிலுக்கு சமயப்பிரசார நிலைய அன்பர்கள் அடிக்கடி வருகை புரிய வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்கள். நிலைய சுவாமிகள் இறைவனின் திருவடியை அடைவதே மக்களின் குறிக்கோளாக அமையவேண்டும் எனக்கூறி, நல்லமுறையில் வரவேற்று வழிபாடு செய்துவைத்த கோயில் சிவாச்சாரியார், அறங்காவலர்கள் ஆகியோருக்கு நன்றி கூறினார்கள். எல்லோருக்கும் பிரசாதம் வழங்கிய பின்னர் விழா இனிது நிறைவெய்தியது.

27—5—73 அன்று மேமாத மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு, சென்னை மயிலாப்பூர் அப்பர்சுவாமி கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. நிலைய அன்பர்கள் சார்பில் ஸ்ரீ காசி விசுவநாதருக்கும் ஸ்ரீ விசாலாக்ஷி அம்மைக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்யப்பெற்றன. திரு. சு. ஞானப் பிரகாசம் திருமுறை, அபிராமி அந்தாதி இவற்றைப் பாராயணம் செய்தார். வழிபாட்டிற்குப் பின்னர் நிகழ்ந்த சமயப் பிரசாரக் கூட்டத்திற்குத்தலைமையேற்ற திரு. C செல்வநடராச முதலியார், கூட்டு வழிபாட்டின் அவசியத்தையும், நன்மையையும் விளக்கிக் கூறினார்கள். திரு. V. N. ஆறுமுகம் பி காம். புலவர், திரு. சு. கேசவன், திருமதி. மீனாட்சிசுந்தரசிவை ஆகியோர் சமயப் பிரசார வழிபாட்டின் அவசியம்பற்றிப் பேசிய பின்னர் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

## ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் குருபூஜை

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலைய பூஜை மன்றத்தில், 16—4—73 அன்று மாலை, ஸ்ரீ உமாபதிசிவாசாரியார் குருபூஜை, திரு. சி. துரைராஜ் B. A., B. L., அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. தலைவர் அவர்கள் தமது தலைமை உரையில், ஆசாரியப் பெருமக்களின் குருபூஜை நாளைச் சிறப்பாகக் கொண்டாடி வழிபாடு செய்தால், மனித இனம் நன்னெறியில் வாழ முடியும், மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் என்று குறிப்பிட்டார்கள். பின்னர், திரு. ந. ரா. முருகவேள் M. A. M. O. L., அவர்கள் உமாபதி சிவத்தின் அருள் வரலாற்றை விளக்கிப் பேசினார்கள், விழா முடிவில் வழிபாடு நிகழ்த்திப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

## நாயன்மார்கள் குருபூஜைவிழா

சென்னை, தருமையாதீன சமயப்பிரசார நிலையத்தில் நாயன்மார்கள் குருபூஜை விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. 7—4—73, 9—4—73, 11—4—73, 17—4—73, 18—4—73 ஆகிய நாட்களில் முறையே நேச நாயனார், கணநாத நாயனார், முனையடுவார் நாயனார், இசைஞானியார், திருக்குறிப்புத்தொண்ட நாயனார் குருபூஜை விழாக்களும் 2—5 73, 4—5—73, 6—5—73, 20-5-73, 30-5-73 ஆகிய நாட்களில் முறையே சிறுத்தொண்ட நாயனார் மங்கையர்க்கரசியார், விறன்மிண்ட நாயனார் குருபூஜைகளும், திருஞானசம்பந்தர், திருநீலகண்ட நாயனார் குருபூஜைகளும், கழற்சிங்க நாயனார் குருபூஜையும் சிறப்பாக நடைபெற்றன. தேவார வகுப்பு ஆசிரியர் மாணவர்களால் திருமுறைப் பாராயணமும் அன்பர்களால் வழிபாடும் நிகழ்த்தப்பட்டன. குருபூஜை நாட்களில் திரு. ஆங்கீரசவேங்கடேச சர்மா அவர்களால் புராண விரிவுரை நிகழ்த்தப்பட்டது. வழிபாட்டிற்குப் பின்னர் அன்பர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

## சிவஞானசித்தியார் பாட வகுப்பு

2, 9, 16, 23, 30—4—73, 7—5—73, 28—5—73 ஆகிய திங்கட்கிழமைகளில், மாலையில் திரு. ந. ரா. முருகவேள் M. A., M.O.L., அவர்களால் சிவஞானசித்தியார் பரபக்கம் பாடமாக நடத்தப்பட்டது. அன்பர்கள் பலர் வந்திருந்து கேட்டு மகிழ்ந்தனர்.

ஒரு நேபாளப் புராணக்கதை;

# காட்டில் கேட்ட குரல்

தீட்டியவர்; டில்லி லலி

மகாகொடியவன் ஒருவன்: கொள்ளை, கொலை அவன் வாழ்க்கை. வயது 50. ஐம்பது கொலைகள் புரிந்து விட்டான். மனமாற்றம் ஏற்பட்டது. மீதி வாழ்வில் அக்கிரமங்களை விட்டொழித்து சாந்திபெற விரும்பினுன்: கானகத்தில் தவநிலையிலிருந்த மாமுனிவர் ஒருவரை அணுகி வணங்கினுன். "இனிபாபச் செயல்களில் ஈடுபடமாட்டேன். எனக்கு என்ருவது ஒருநாள் கடவுள் பாபவிமோசனம் அளிக்க அருள்புரியுங்கள்" என மன்ருடினுன்.

முனிவர் முறுவலித்தார். "பழைய தீச்செயல்களை மறந்து பரிசுத்தனுக இனி வாழ்ந்து வா. ஆண்டவனை நினை. இந்தா, இந்தக் கருப்புத் துணியைப் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திரு. உன் நற்செயல்களால் பாப விமோசனம் கிடைத்த கணமே இந்தத் துணி வெண்மை நிறமாக மாறும். கடவுளின் பூரண அருள் கிட்டியதற்கு அதுவே அடையாளம்" என ஆசீர்வதித்துக் கருப்புத்துணியொன்றை மடித்துக் கொடுத்தார்.

அவன் பயபக்தியுடன் அதைப் பெற்றுச் சென்ருன். கொலை, களவு முதலிய தீச்செயல்களை அறவே நீக்கி, மனத்தை நல்ல காரியங்களில் ஈடுபடுத்திப் பக்குவம் பெற்ருன். பலன் ஏதும் எதிர்பாராமல் உழைத்தான்; துதித்தான்.

ஆண்டுகள் ஓடின. ஒரு நாள் தனித்த காட்டில் ஒரு பெண்ணின் அபயக்குரல் கேட்டு ஓடிப்போய்ப் பார்த்தான். பாழடைந்த மண்டபத்தில் ஒரு முரடன் இளம் பெண்

ஒருத்தியைப் பலவந்தப்படுத்துவதைக் கண்டதும் ஆவேச முற்முன். ஒரே பாய்ச்சலில் அந்த முரடனை விழ்த்தி, அவனைப் பாருங்கல்லினுல் அடித்துக் கொலை செய்து விட்டான்.

சற்றே நிதானம் அடைந்ததும் தான் செய்துவிட்ட 51-வது கொலையை எண்ணிப் பதறினுன். "ஐயோ மதி மயங்கி விட்டேனே? திரும்பவும் கொலைகாரனுகிவிட்ட எனக்கு இனி ஏது விமோசனம்" என தலைமயிரைப் பிய்த்துக் கொண்டான். ஓடினுன்; தவமிருந்த முனிவரிடம் திரும்பவும் ஓடினுன். அவர் காலில் விழுந்து கதறினுன். "சுவாமி, நான் மகாபாபி, ஆண்டாண்டு காலம் முயன்றும் என் சின்னபுத்தி கொலைப் புத்தியாகவே இருக்கிறதே! நான் 51-வது கொலையும் செய்துவிட்டேன். எனக்கு விமோசனமே கிடையாது; கிடையவே கிடையாது. கடவுளின் அருளுக்கு நான் என்றும் உகந்தவன் அல்ல. நீங்கள் அருளிய கருப்புத் துணியை இனி வைத்திருக்கக் கூட நான் அருகதை அற்றவன். இதைத் தங்களிடம் சமர்ப்பித்து விட்டு எங்காவது ஓடி உயிரை மாய்த்துக் கொள்கிறேன் சுவாமி" என்று கத்தியவண்ணம் கருப்புத் துணியை முனிவரின் காலடியில் வைத்து நமஸ்கரித்தான். "கருணை கிடைக்க மாட்டாத கொடியவன் நான்" எனக் கண்ணீர் உகுத்த வண்ணம் மண்டையைப் பூமியில் முட்டி முட்டிக் கதறினுன்.

முனிவர் அவன் தலையைத் தொட்டு. "ஆண்டவனின் அருள் கிட்டிவிட்ட பரிசுத்தனே எழுந்திரு. நீ சமர்ப்பித்த கருப்புத் துணியைப் பார்! எனப் பணித்தார். அத்துணி, துல்லிய வெண்மை நிறத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்தது!

நன்றி.

—தினமணிகதிர் 8—6—73

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

( பிரமாதீசஸு ஆனிமீ 1௳ முதல் 31௳ முடிய )

( 15—6—73 முதல் 15—7—73 முடிய )

மேற்படிஸு வைகாசி 3 ௳ வியாழக்கிழமை உதயாதி நாழிகை 43 வினாடி 35க்குக் கேட்டை நட்சத்திரம் முதல் பாதத்திலும், கும்ப லக்னத்திலும் ஸ்ரீ லோக ரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் மிதுனராசியில் மாத பிறப்பாகப் பிரவேசம் செய்கிறார். மேற்படி பிரவேச காலபலன் பருவ மழை விருத்தியும் சுபிட்ச சூசனையும் விலைவாசிகள் குறைவும், ஏற்படும். மேற்படி ஆனிமீ 16௳ சனிக்கிழமை மாலை 6 மணி 8 நிமிஷத்துக்கு நம தக்ஷிண தேசத்தில் சூரிய கிரகணம் திருவாதிரையில் ஸ்பரிசம் செய்துகாட்டும். கிரகணங்கள் தமிழ்நாட்டில் ஸ்வல்ப நாழிகை ஆனாலும் திருவாதிரை சுவாதி சதயத்தில் ஜனித்தவர்கள் தனக்குத் தக்கபடி சாந்திகள் தானங்கள் செய்துகொள்ளவேணும். அத்துடன் ஸ்ரீ சநிபகவானும் ஆனிமீ 26௳ மிதுன ராசியில் பிரவேசித்து கேதுவுடனும் சூரியனுடனும் சேருகிறார். அதன்பலன் விந்திய மலைக்கு வடதேசங்களிலும் மிலேச்ச தேசங்களிலும் அன்னிய நாடுகளில் பெரிய தேசங்களிலும் உள்நாட்டுக் கலகங்களும் ஜனங்களுக்குப் பயத்தையும் காட்டும். இயற்கையாக உலகில் வரவேண்டியவைகள் மாறி மாறி வரும். ஜனங்களுககு உலகில் கடவுள் சாந்த நிலைமையைத்தர எல்லோரும் பிரார்த்திக்க வேணும்.

## 1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும், அதிகமான முயற்சியினால்தான் சகலமான காரியங்களும் நடக்கும். ஜீவன விஷயத்தில் அடிக்கடி மாறுதல் ஏற்பட்டுக்

கொண்டு இருக்கும். வரவு செலவு சமமாகும் மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

2. ரிஷபம் – கார்த்திகை $\frac{3}{4}$ – ரோஹிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். விவாகாதி மங்களகரமான காரியங்கள் நடக்கும். புண்ணிய க்ஷேத்திர யாத்திரையும் சுவாமி தரிசனமும் கிடைக்கும். கீர்த்தி எங்கும் அதிகமாக இருக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

3. மிதுனம்–மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ – திருவாதிரை–புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். வம்ச விருத்தி ஏற்படும். சந்தோஷம் ஏற்படும் ஆரோக்யம் உண்டாகும். புதிதாக வஸ்திரங்கள் ஆபரணங்கள் வாங்குதலும் சுபகாரியங்களும் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டு இருக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

4. கடகம் – புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். வரவு செலவு சமமாக இருந்துகொண்டு இருக்கும். வெகு நாட்களாக எதிர்பார்த்து நடவாத காரியம் ரொம்பவும் முயற்சியால் தெய்வபலத்தோடு நன்கு நடக்கும். ஜீவனம் ஓங்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஆரோக்யம் உண்டாகும் படிப்பு விருத்தியாகும். புதிதான உத்தியோகத்தால் நன்மை உண்டாகும் தனக்கும் தன்னைசேர்ந்தவர்களுக்கும் வேண்டிய நன்மைகள் எல்லாம் தெய்வ பலத்தால் ஏற்படும். சுபம் உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

6. கன்னி – உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். விசேஷமான அற்புதமான காரியங்கள் எல்லாம் நடக்கும்.

மேலோர் பெரியோர்களின் அன்பும் தெய்வ பலமும் முன் னின்று காக்கும். புத்திராதிகளால் நன்மையும் இல்லற சுகமும் உண்டாகும். திங்கள் செவ்வாய் சுபமாகும்,

7. துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். அதிகமான தாபம் உண்டுபண்ணும். கடவுள் அருளால் எல்லாக் காரியங்களும் சாதிக்க முடியும். நஷ்டமான பொருள் கொஞ் சம் கொஞ்சமாக வந்துசேரும். புதன், வியாழன் சுபமாகும்.

8. விருச்சிகம் - விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். சகலமான காரியங்களில் மாறுதல் ஏற்படும். புத்தியானது எப்பொழுதும் சஞ்சலமாகவே இருந்துகொண்டு இருக்கும். நண்பர்களின் உதவியாலும், தெய்வபலத்தாலும் மனம் சாந்தி யாக இருக்கும். வெள்ளி சனி சுபமாகும்.

9. தனுசு - மூலம் – பூராடம் – உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும மிச்சிரமான பலனைத்தரும். குடும்பம் ஓங்கும். கடன் நிவர்த்தியாகும். புதிதாகத் தொழில் மூலம் எல்லாக் காரியமும் சாதிக்கமுடியும். மேலோர் பெரி யோர்களின் அன்பு கிடைக்கும். கீர்த்தி பத்திரம் கிடைக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

10. மகரம்-உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம்

மகரராசி 9 பாதங்களும், மிச்சிரமான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். சஞ்சாரம் அதிகமாகும், கிரகசுகம் ஏற்படும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். மேலோர்களின் அன்பினுல் சகலமும் சாத்தியமாகும். செவ்வாய், புதன் சுப மாகும்,

11. கும்பம் – அவிட்டம் ½-சதயம் –பூரட்டாதி–¾

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். ஸ்திர மான உத்தியோகம் உண்டுபண்ணும். சுப சோபனுதி காரி

யங்களும் அடிக்கடி ஏற்படும். புதிதாக வஸ்திரங்கள் ஆபரணங்கள் சேரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமான பலனைத் தரும். அநேகவிதமான அற்புதமான காரியங்கள் எல்லாம் நடைபெறும். உலகத்தில் பிரசித்தி ஏற்படும். வித்யை விருத்தியாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும், சுபம் உண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

குறிப்பு :— மேற்படி ஆனிமீ 26உ மிதுன ராசியில் ராகு கேதுக்களுடன் 7க்கு 7ல் சூரியன், சனி, புதன், சந்திரன் ஒருவருக்கொருவர் சமசப்தம ராசியில் சஞ்சரிப்பதால் ஆகாசம் பூமிகளிலும், த்வீபாந்தரங்களிலும் அநேக விதமான அற்புதங்களைக்காட்டும். தெய்வபலம் உள்ள தேசங்கள் காப்பாற்றப்படும். சுபம் உணடாகும்.


## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரு. 3—00.

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்,
உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B. L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# பார்வையாளர் குறிப்பு நகல்

## தருமையாதீனம்

## ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

சோழநாட்டில் உள்ள தலையாய கோவில்களில் ஒன்றாகிய சீகாழிக் கோயிலில் இன்று வழிபடும் பேறு பெற்றேன். ஆளுடையபிள்ளை தோன்றிச் சைவ நெறி வளர்த்த இத்தலத்லைத திக்கவும் அஞ்சி, ஆளுடைநம்பிகள் ஊரின் வெளியே நின்றே இறைவனைப் பரவிச் சென்றாரெனின் இத்தலத்தின் சிறப்பை மேலும் கூறவேண்டியதில்லை. சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் சுந்தரரும் வாதவூர்த்தேசிகரும் பிறந்திலரேல் சைவ சமயம் இத்துணை வளர்ச்சி பெற்றிருக்காது. இத்தகைய திருக்கோயில் வழிபாடும் குருவழிபாடும் மக்கள் வாழ்வுக்கு மிக இன்றியமையாதன. 'செம்மலர் நோன்றாள் சேரல்ஒட்டா' என்ற சிவஞானபோதச் சூத்திரம் இதனை மிக அருமையாக உணர்த்துகின்றது. இன்று சீகாழிக் கோவில் வழிபாட்டில்எனது உள்ளம் இறையின்பத்தைத் துய்த்தது. இக்கோயிலை நன் முறையில் பாதுகாத்து வருகின்ற ஆதீனத் தலைவருக்கும் தம்பிரான் சுவாமிகளுக்கும் கண்காணிப்பாளருக்கும் பிற பணியாளருக்கும் எல்லாப்பேறுகளையும்நல்க இறைவனை வழுத்துகின்றேன்.

(Sd) D. P. S. Palanisamy,
மாவட்ட குற்றவியல் நீதிபதி (Dt. Magistrate)
30—4—73. குடந்தை.

x x x x

"This is a very old and sacred place. It has the timeless, peaceful quality that makes such quality possible."

(Sd.) Gary Schwindler Cook Dr.
Box 4, Athens, Ohio, U. S. A.
3-2-73. Professor of Ohio University U. S. A.

x x x x

"The temple has been maintained very well. It inspires great devotion."

R. K. A. Subramanian,
Accountant General,
(O. S. O.)
Office of the A. G., TamilNadu.